விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P. 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 095 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 10 வெள்ளிக்கிழமை (24.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பாராளுமன்றம் மூலம்
# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு
## ஊடகப் பிரதானிகளிடம் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு) தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நீண்டகால இனப்பிரச்சினை பாராளுமன்றம் மூலம் தீர்க்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (11ஆம் பக்கம் பார்க்க)

### ராகுல் காந்திக்கு இருவருட சிறை

(புதுடில்லி)
இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு 2 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
குற்றவியல் அவமதிப்புக் குற்றத்துக்காக இந்தத் தண்டனை 11

### பால்மாவின் விலையை குறைக்க தீர்மானம்

(கொழும்பு)
இறக்குமதி செய்யப்படும் பால்மாவின்விலையை கிலோ ஒன்றுக்கு 200 11

# தேர்தல் ஒத்திவைப்பு
## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு) காலவரையறையின்றி உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (11ஆம் பக்கம் பார்க்க)

### சிவபூமி திருமந்திர அரண்மனை திறப்பு விழா இன்று



(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் அமையப்பெற்ற சிவபூமி திருமந்திர அரண்மனை திறப்பு விழா இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (03ஆம் பக்கம் பார்க்க)

### மோட்டார் வாகனம் உட்பட
## 101 வகையான பொருட்கள் இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)
இலங்கையில் தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகன இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக இறக்குமதி தடை நீக்கப்பட வேண் 11

### சிவசேனை அதிரடி முறைப்பாடு
## யாழ்.வந்த மதமாற்ற பிரசிங்கிகளை திருப்பி அனுப்பிய குடிவரவு அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்.வந்த மதமாற்ற பிரசிங்கிகளை குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.
மானிப்பாயில் மதம் மாற்றும் பிரசாரக் கூட்டங்களில் பங்குகொள்வதற்காக எட்டுப் பேர் அடங்கிய குழு ஒன்று நேற்று யாழ்ப்பாண சர்வதேச விமான 11

### யூரியாவின் விலை குறைந்தது

(கொழும்பு)
யூரியாவின் விலை குறைவடைந்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். 11

### மல்லாவி கொல்லவிளாங்குளம் பகுதியில்
## மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் பலி

(மல்லாவி)
மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் நேற்று மல்லாவி கொல்லவிளாங்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. 11

### கல்விக்கு இடையூறு விளைவித்தால்
## அத்தியாவசிய சேவையாக பாடசாலை பிரகடனப்படுத்தப்படும்
### ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)
கல்விக்கு இடையூறு விளைவித்தால் பாடசாலைகள் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்படும் என ஜனாதிபதி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து மன்னாரில் போராட்டம்



வடக்கு கடற்பகுதியை இந்திய மீனவர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதையும், இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையையும் கண்டித்து நேற்று வியாழக்கிழமை மன்னாரில் மாபெரும் கண்டன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு கடல் பகுதியில் வரி அறவீடு செய்து இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்களுக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாகவும், இந்திய மீனவர்களின் தொடர்ச்சியாக இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதை கண்டித்து வடக்கு மாகாண மீனவர்கள் ஒன்றிணைந்து மன்னாரில் மாபெரும் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். (ம-7,9,285)

# சமாதானத்தை வலியுறுத்தி யாழிலிருந்து நடைபயணம்



நாட்டில் சமாதானம் நல்லிணக்கத்தை வலியுறுத்தி, அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டி, வெலிமட சதானந்ததேரர், யாழ்ப்பாணம் - ஆரியகுளம் ஸ்ரீ நாகவிகாரையிலிருந்து தெய்வேந்திர முனைவரை பௌத்த சின்னத்தை தாங்கியவாறு, நடைபயணம்ஒன்றை நேற்று ஆரம்பித்தார்.

நாட்டில் சமாதானம் ஒற்றுமையினை வலியுறுத்தி நடை பயணத்தை ஆரம்பித்துள்ளதாகவும் தனது தூர நோக்கமான செயற்பாட்டிற்கு அனைத்து மக்களும் ஆதரவினை வழங்க வேண்டும்எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் வாழுகின்ற அனைத்து இன மக்களும் குல, மத பேதம் இன்றி ஒற்றுமையாகவும் நிரந்தர சமாதானத்துடன் வாழ வேண்டி பிரார்த்தித்து நேற்று காலை நயினாதீவு நாக விகாரையில் வழிபாடுகளை மேற்கொண்டு, ஆரிய குளம் நாகவிகாரையில் இருந்து இலங்கையில் உள்ள அனைத்து பிரதேசங்களுக்கும் சென்று தெய்வேந்திர முனையில் தனது நடை பயணத்தை நிறைவு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7,9,91,33)

## போட்டிப் பரீட்சை இடைநிறுத்தம்

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு இணைப்பதற்கான போட்டிப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்களான விஜித் K. மலல்கொட, A.H.M.N.நவாஸ் மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய குழாம்நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பட்டதாரிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான பரிசீலனை நிறைவு செய்யப்படும் வரை போட்டிப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர். (ம-7,9)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரத்திற்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள லொத்தர் கூடுகளிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட ஆண் லொத்தர் விற்பனையாளர்கள் தேவை.

**(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது மற்றும் அங்கவீனம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்)**

(15022)

**077 603 1723**

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு விசா ஆலோசனை

கனடா, லண்டன்(தாதிகளுக்கான குடும்ப விசா) அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இத்தாலி, றொமேனியா, போலாந்து போன்ற நாடுகளுக்கான வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுக் கொள்ள ஆலோசனைகள் வழங்கப்படும்.

(C-6215)

**077 557 4190**

## வட மாகாண மக்களுக்கு ஓர் நற்செய்தி

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசிட் விசா ஒரு மாத காலத்தில் ஒழுங்குபடுத்தி தரும் நிறுவனமான**

**Hybrid International Hub (pvt) Ltd**

லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியுஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கான மாணவர் விசா 100% உத்தரவாதத்துடன் முற்கட்டணம் ஏதுமற்ற Sponsor கட்டணங்களற்ற சேவையினையும் வழங்கி வருகிறார்கள்.

**நேர்த்தியானதும் நம்பகரமானதுமான சேவையினை பெற்றுக் கொள்ளுங்கள்**

(C-6217)

**Contact Us**

LIC Tower - 1st Floor
No.36, Vaithilingam Thuraisamy Road
(Near to Vembady High School)
TP No : 021 222 1265 / 076 250 0098
E.Mail : hybridinternational37@gmail.com

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள **மேசன், கூலியாட்கள்** மற்றும் **பெயின்ரர்**(Painter) தேவை.

**076 760 0403**
**077 592 5371**

(15018)

## யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்



### பங்குனி குளிர்த்தி வெள்ளிரத மஞ்சள் பால்குட பவனி தீ மிதிப்பு உற்சவம்

*26,27/03/2023 ஞாயிறு, திங்கட்கிழமைகளில்...*

- 26/03/2023 ஞாயிற்றுக்கிழமை வெள்ளிரத மஞ்சள் பால்குட பவனி அதிகாலை 4.45 மணிக்கு வசந்தமண்டப பூஜை
- அதிகாலை 5 மணிக்கு அம்பாள் வெள்ளிரதத்தில் கிராமபிரவேசம் கொள்ளல்.

*கிராம பிரவேச வீதிகள்*

ஆலயத்தில் இருந்து புறப்பட்டு வைமன்வீதி நாவலர்வீதி ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதி அம்மன் வீதி பலாலிவீதி ஆலடிச் சந்தி பழம்றோட் அரசடி வீதி நல்லூர் சிவன் கோவில் முன்வீதி செட்டிதெரு பாப்பையாகடைச் சந்தி நாவலர் வீதி கைலாச பிள்ளையார் கோவில் கோவில் வீதி வழியாக பருத்தித்துறை வீதியை அடைந்து நல்லூர் சிவன்கோவில் பின் வீதி வழியாக மீண்டும் ஆலயத்தை வந்தடைதல்

*பால்குட அபிஷேகம் பகல் 10 மணி*

**குறிப்பு**- பால்குடபவனியில் பங்குகொள்ளும் அடியவர்கள் தங்களுக்கு அருகில் இருக்கும் ஆலயங்களில் இருந்து மஞ்சள் பால்குடத்துடன் அம்பாளின் வெள்ளிரத பவனியில் இணைந்து கொள்ளமுடியும் அல்லது வழமை போன்று கைலாச பிள்ளையார் ஆலயத்தில் இருந்தும் இணைந்து கொள்ளலாம்.

- ந.ப 12.30 மணிக்கு அன்னதானம்

### மஹா தீ மிதிப்பு உற்சவம் 27/03/2023 திங்கட்கிழமை

- காலை 7.00 மணிமுதல் வலுந்து பானை ஏற்றி பொங்கல் ஆரம்பமும் தீ மூட்டலும்
- பி.ப 5.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை
- பி.ப 6.00 மணிக்கு தீ மிதிப்பு

**குறிப்பு** - குளிர்த்தி பொங்கலில் பங்குகொள்ள விரும்புகின்ற அடியவர்கள் பொங்கலுக்குரிய பொருட்களை தாமே எடுத்து வந்து காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00மணிவரை பொங்கல் வழிபாட்டில் ஈடுபடலாம்.

தெளிவே என் சிந்தனை (C-6218)

**இங்ஙனம்**
**கௌரவ கலாநிதி இராஜ ஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்**
**முதன்மை பிரதம குருவும் - ஆதீனகர்த்தாவும்**
**(மேற்படி தேவஸ்தானம்)**



## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை



### வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 05.04.2023 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கான '**கடை ஏலம் விடுதல்**' எதிர்வரும் 26.03.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு**

- ஏலத்தின் போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
- பொலித்தீன் தடைசெய்யப்பட்டுள்ளது.

**ஆலய பரிபாலன சபை**
**கரைச்சி புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலயம்**

(C-6216)

## VILLAGE HOTEL

### யாழ் - கொழும்பு சேவை மீண்டும் ஆரம்பம்

**AIRPORT PICK UP DROP SERVICE**

அன்னை முத்துமாரி பேரூந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

- VILLAGE HOTEL நிர்வாகம் -




077 544 8503

(14967)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி திருமந்திர அரண்மனை

# திறப்பு விழா இன்று



(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இலங்கை சிவபூமி அறக்கட்டளையினால் நிறுவப்பட்டுள்ள சிவபூமி திருமந்திர அரண்மனை திறப்பு விழாவானது இன்று அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும்.**



இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 108 லிங்கங்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது.

3 ஆயிரம் தமிழ்ப் பாடல்களுடைய பல நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த வரலாற்றுப் பெட்டகமான திருமந்திரத்தை கையால் உளி கொண்டு கருங்கல்லில் செதுக்கியுள்ளனர். இவை இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



உலகிலேயே 3 ஆயிரம் தமிழ்ப் பாடல்களை கருங்கல்லில் பதிப்பித்த பெருமை சிவபூமி அறக்கட்டளையைச் சாரும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-33)

## வரலாறு காணாத தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும்

### எச்சரித்த ஐக்கிய நாடுகள் சபை

(கொழும்பு)

காலநிலை மாற்றத்தாலும், அதிகரித்து வரும் சுற்றுச் சூழல் மாசுபாட்டினாலும் உலக அளவில் வரலாறு காணாத தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுமென ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

வளர்ந்து வரும் நுகர்வு கலா சாரம் மனிதனின் அடிப்படைத் தேவையை தாண்டி நிறைய விடயங்களை செய்கிறது.

இதனால் அளவுக்கு அதிகமான தொழிற்சாலைகளும் வாகனங்களும் பூமியின் மீது துளைக்கப்படும் ராட்சத குழாய்களும் பூமி அதிக அளவு வெப்பமடைய காரணமாக இருக்கின்றன.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் " உலக நாடுகள் ஓர் ஆபத்தான பாதையில் பயணிக்கின்றன.

நுகர்வு கலாசாரம், காலநிலை மாற்றம் மற்றும் அதி தீவிர வளர்ச்சியினால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது.

ஒரு ஆண்டுக்கு 300 கோடி மக்கள் நீர் பற்றாக்குறையால் வாழ்கின்றனர் என ஐ.நாவின் ஆய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. • (நி)

## தற்கொலைக்கு முயற்சித்த தமிழ் அகதிகள் ருவாண்டா மருத்துவமனையில் அனுமதி

(ருவாண்டா)

பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலுள்ள டியாகோ கார்சியா தீவில் 5 இலங்கைத் தமிழ் அகதிகள் தற்கொலை முயற்சிக்கு முயற்சித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து குறித்த இலங்கை தமிழ் அகதிகள் 5 பேரும் ருவாண்டா மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தி நியூ ஹியூமனி டேரியன் செய்தி வெளியிட்டுள்ளது.

ருவாண்டா தலைநகரம் கிகாலியில் உள்ள மருத்துவமனையில் குறித்த 5 புகலிடக் கோரிக்கையாளர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த அகதிகள் டியாகோ கார்சியாவில் 18 மாதங்களாக தடுப்பில் இருந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் விற்கப்பட்டால் 3000 பேர் வேலையிழப்பர்

### தொலைத்தொடர்பு தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்கப்பட்டால், சுமார் மூவாயிரம் ஊழியர்களுக்கு வேலை இழக்கும் அபாயம் உள்ளதாக தொலைத்தொடர்பு தொழிற்சங்கங்கள் எச்சரிக்கின்றன.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பெரும்பாலான சேவைகளை இணையத்தளத்தில் மேற்கொள்ள முடியும் எனவும், இவற்றில் சில சேவைகளை தற்போது தமது நிறுவன ஊழியர்களே செய்து வருவதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஹேமந்த நெத்திகுமார தெரிவித்துள்ளார்.

எனினும், தொலைத் தொடர்பு நிறுவனம் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி, ஒன்லைன் முறையின் மூலம் சேவைகளை வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அப்படி நடந்தால் தற்போது பணியில் இருக்கும் மூவாயிரம் ஊழியர்களின் குடும்பங்கள் வேலையிழப்பார்கள்.

ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் லங்கா மருத்துவமனையில் அரசாங்கத்தின் பங்குகளை விற்பனை செய்வதற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் நாற்பத்தொன்பது வீதமான பங்குகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஐந்நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்க தயாராக உள்ளன. (நி)

## விவசாயிகளுக்கு 30,000 ரூபா உதவித்தொகை வழங்க தீர்மானம் - விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு ஏக்கருக்கும் குறைந்த நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் குறைந்த வருமானத்தை கொண்ட 48 ஆயிரம் விவசாயக் குடும்பங்களுக்கு 30 ஆயிரம் ரூபா வீதம் நிவாரண உதவித் தொகை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த உதவித்தொகையை வழங்குவதற்கு சர்வதேச ஒத்துழைப்புக்கான யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி அமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்த உதவித்தொகை இரண்டு தவணைகளில் 15 ஆயிரம் ரூபா வீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒரு ஏக்கருக்கும் குறைவாக நெல் பயிரிடும் விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## முட்டைக் கப்பல் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற முட்டைகளின் முதற்தொகுதி நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. முட்டைகள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக 3 நாட்கள் கோரப்பட்டுள்ளதாகவும் இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தக, உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (நி)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டமூலம்

### வர்த்தமானி அறிவிப்பு வெளியானது

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக, புதிய சட்டமூல வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைய, புதிய சட்ட மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரானது எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த சட்டமூலம், ஆங்கிலத்தில் anti-terrorism எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தற்காலிக ஏற்பாடுகளை நீக்குவதே இந்த சட்டமூலத்தை தயாரிப்பதன் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்த ரோகித்



இந்தியா, அவுஸ்திரே லியா அணிகளுக்கு இடை யிலான 3 ஆவது ஒருநாள் போட்டி சென்னை சேப் பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 269 ஓட்டங்களுக்கு ஓல் அவுட்டானது. அதிகபட்ச மாக மிட்செல் மார்ஷ் 47 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து ஆடிய இந்தியா 248 ஓட்டங்களுக்கு ஓல் அவுட்டாகியது. விராட் கோலி அரை சதமடித்து 54 ஓட்டங்களில் அவுட்டானார். இதையடுத்து, அவுஸ்திரேலியா அணி 21 ஓட்டங் கள் வித்தியாசத் தில் வென்று, தொடரையும் 2-1 என்ற கணக்கில் கைப் பற்றி அசத்தியது. இந்தப் போட்டியில், ரோகித் சர்மா 17 பந்துகளில் 2 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 30 ஓட்ட ங்கள் எடுத்து ஆட்டமிழ ந்தார். இதன் மூலம் சர்வ தேச கிரிக்கெட்டில் ஆசியா வில் 10,000 ஓட்டங்களை கடந்த 8 ஆவது இந்தியர் என்ற பெருமையை ரோகித் சர்மா பெற்றார். (4)

# வலைப்பந்தாட்ட சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ். மாவட்ட வலைப்பந் தாட்ட சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு கடந்த ஞாயிற்றுக் கிழமை யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெற் றது.

இதில் தலைவராக திருமதி வ. அபிதா, செயலாளராக செல்வி.அ.அமுதினி, பொரு ளாளராக திருமதி ச.சியாமா, உபதலைவராக திருமதி. எஸ்.மைதிலி, பயிற்றுவிப்பா ளர்களுக்கான தலைவராகவும் உப செயலாளராகவும் எஸ்.ஸ்ரீசக்தி, உபபொருளாள ராக எஸ்.ஜெயந்தா, நடுவர்க ளுக்கான தலைவராக திருமதி. எஸ்.விதுரா, சுற்றுப் போட்டிக் கான தலைவராக செல்வி எஸ்.எழிலேந்தினி ஆகியோ ரும் தெரிவு செய்யப்பட்ட னர். (4-6-90)

# இந்தியாவிற்கு எதிரான ஒருநாள் தொடரை வென்றது அவுஸ்திரேலியா



இந்தியா அணிக்கெதி ரான மூன்றாவதும் இறுதி யுமான ஒருநாள் போட்டி யில், அவுஸ்திரேலிய அணி 21 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரே லிய அணி தொடரை வென் றுள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுதிஸ்ரேலிய அணி, முதலில் துடுப்பெடு த்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி, 49 ஓவர்கள் நிறை வில் அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மிட்செல் மார்ஷ் 47 ஓட்டங் களையும் அலெக்ஸ் கெர்ரி 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஹர்திக் பாண்ட்யா மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் சிராஜ். மற்றும் அக்சர் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ் த்தினர்.

இதனைத் தொடர்ந்து 270 என்ற வெற்றி இல க்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்திய அணி, 49.1 ஓவர்கள் நிறை வில் அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதனால், அவு திஸ்ரேலியா அணி 21 ஓட்ட ங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, விராட் கோலி 54 ஓட்டங் களையும் ஹர்திக் பாண் ட்யா 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அவுஸ்திரேலியா அணி யின் பந்துவீச்சில், ஆடம் செம்பா 4 விக்கெட்டு களையும் ஆஸ்டன் அகர் 2 விக்கெட்டுகளையும் மார் கஸ் ஸ்டொயினிஸ் மற்றும் சீன் அபோட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, ஆடம் செம்பா தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் நாயகனாக மிட் செல் மார்ஷ் தெரிவு செய்ய ப்பட்டார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2791

### மதுஷா




### விதுனா




### கௌரி




### நிதேஷ்




### தசாப்தன்




### கமலநாதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக அரங்க விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப் பொருளில் தொடர்ச்சியாக மாதாந்தம் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் ஒன்பதாவது நிகழ்வு அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை 24, 25, 26 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

அந்தவகையில் இன்று மாலை 4 மணியளவில் இடம் பெறவுள்ள இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வானது, ஈழத்து நூல்களை அறிவோம் என்ற தலைப்பில் நூல்களின் அறிமுகம் மற்றும் கலந்துரையாடலாக கலைஞர் எஸ். ஜெயக்குமார் நினைவு அரங்கில் சிரேஷ்ட சட்டத்தரணியும் கவிஞருமான சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)



அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு செல்வச் சந்நிதி ஆச்சிரமத்தின் மோகன் சுவாமியின் ஏற்பாட்டில் நேற்று மருந்து வகைகள் வழங்கி வைக்கப்பட்டன. சிறுவர்களுக்கான, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட மூன்று இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

(படம்- சிவசாந்தன்)

# தமிழ்மொழி தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் நடைபெறும் திகதிகள் தொடர்பாக வடமாகாண கல்வித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பாடசாலை மட்டப்போட்டிகள் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும் வலய மட்டப் போட்டிகள் ஜூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண மட்டப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும். தேசிய மட்டப் போட்டிகள் யாவும் நவம்பர் 18,19 மற்றும் 25,26 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. (4-6-90)

# யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை கொட்டடி சீனிவாசகம் வீதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பழைய வட்டாரம் 1,18,19(புதிய வட்டாரம் 13,14 மற்றும் 25) ஆம் வட்டாரங்களுக்கான 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு வரி அறிவித்தல் பெயர்மாற்ற விண்ணப்பப்படிவம், துவிச்சக்கரவண்டி உரிமம் போன்ற சேவைகள் வழங்கப்படுவதுடன் இதுவரை காலமும் செலுத்தப்படாமல் உள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர் வரி போன்றவற்றை செலுத்த முடியும் எனவும் மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-4)

# எல்லை தாண்டிய மீன்பிடி 12 தமிழக மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 தமிழக கடற்றொழிலாளர்கள் கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் இரு படகுகளையும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் பகுதியை சேர்ந்த 12 கடற்றொழிலாளர்களும் நேற்று அதிகாலை நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த போது, கடற்படையினர் கைது செய்து அவர்களை மயிலிட்டி துறைமுகத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

மேலதிக சட்ட நடவடிக்கைக்காக 12 கடற்றொழிலாளர்களும் கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(4-6-33-104)

# வைரவிழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியின் வைரவிழாவினை முன்னிட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் மலர் வெளியீடு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. சிவபாலசுந்தரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் இறுதி நிகழ்வாக இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. (நி-4)

# மணல் அகழ்வு; உழவு இயந்திரம் பறிமுதல்

(சாவகச்சேரி)

உரிய அனுமதிகள் இன்றி சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற உழவியந்திரம் ஒன்றினை நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதி பகுதியில் வைத்து உழவியந்திரத்தை பொலிஸார் கைப்பற்றிய போதிலும் உழவியந்திரத்தில் வந்தவர்கள் தப்பித்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.(4-6-30)

# மணல் ஏலவிற்பனை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் மணல் ஏல விற்பனை இடம்பெற உள்ளதாக நீதிமன்றப்பதிவாளர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை இன்று 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஏலத்தில் விடப்பட உள்ளது.

அதேவேளை குறித்த மணலை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னர் பார்வையிட முடியும் என்று நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார். (4-6-315)

# சுற்றுலா சேவை வழங்குநர்களை பதிவு செய்வதற்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சுற்றுலா தொடர்பான சேவை வழங்கும் சொகுசு விடுதிகள், உணவகங்கள், வீட்டுடன் கூடிய தங்குமிடங்கள், பங்களாக்கள், விருந்தினர் தங்குமிடங்கள் மற்றும் பயண முகவர்கள் உட்பட, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யும் முகமாக வழிகாட்டல் கருத்தரங்கும் நடமாடும் சேவையும் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவர்கள் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் 021 221 7311 தொலைபேசி இலக்கம் அல்லது 077 462 8355 என்ற வாட்ஸ் அப் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு 27 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர், விபரங்களை முன்பதிவு செய்யுமாறு வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-4)

# இராசிபலன்

24.03.2023
பங்குனி 10, வெள்ளிக்கிழமை
திருதியை முன்னிரவு- 8.22 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 4.22 மணிவரை
சுபநேரம் -6.16-7.46 மணிவரை
இராகுகாலம்-10.46-12.16 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - உத்தரம்,அத்தம்.

வளவன்

**மேஷம்**
கனவுப் பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்**
மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**
பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சயன சுகக் குறைவான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும்.

**விருச்சிகம்**
பொது வாழ்வில் புகழ் கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்**
பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி**
குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை.

**தனுசு**
இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் நம்பிக்கை கூடும், நெடு நாளைய கனவுகள் நனவாகலாம்.

**மீனம்**
தொழிலை, விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

பக்தியோடு பிரார்த்தனை செய், ஆனால் சுத்தியலை பலமாய் அடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருகம்பனை - கவுணாவத்தை -அந்திரான
# புனருத்தாரண பஞ்சகுண்டபக்ஷ அட்டபந்தன



## அருளாசிகள்

நரசிங்க வைரவப் பெருமானுக்கு இன்று நடைபெறும் கும்பாவிஷேகம் அனைவருக்கும் மகிழ்ச்சியினைத் தருகின்றது. நீண்ட காலமாக எழுந்தருளி அருள்புரியும் வைரவப் பெருமானிற்கு பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாவிஷேகம் இன்று நடைபெறுவது ஆலயத்திற்கும் ஊர் மக்களிற்கும் சிறப்புக்களைத் தருவதாகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வகையில் தோன்றும் ஆலய வழிபாடு மனதிற்கும் உடலிற்கும் அமைதியினைத் தருகின்றது. இவ் வகையில் இலங்கை திருநாட்டின் இவ் ஆலயங்கள் வேண்டிடுவார் வேண்டுவதையும் காத்தருளும் கடவுளாகிய வைரவப் பெருமானினை அனைவரும் தரிசனம் பண்ணி மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக..!

**" என்றும் வேண்டும் இன்ப அன்பு"**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்.**



## வாழ்த்துச் செய்தி மடல்

இலங்கையின் சென்னியாக திகழும் வடபுல யாழ்ப்பாணம் - கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவப் பெருமானின் இவ்வருட மகா கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறோம்.

பல்வேறு அசாதாரண கோலமுள்ள காலங்களில் கூட வைரவப் பெருமானின் அருட்கடாட்சம் பொங்கிப் பிரவாகித்து இருந்ததனை இக்கிராமம் மட்டுமல்ல உலகமே அறிந்த வியப்பில் ஆழ்த்தியிருந்தது. குலதெய்வமாய், காவல் தெய்வமாக எனப் பல வடிவங்களில் முன்னே தோன்றி எம்மக்களின் இடர் தீர்த்து முன்சென்ற கைங்கரியமும் நரசிங்க வைரவப் பெருமானின் அருளாட்டுக்கு சான்றுகளாக இருப்பது வெள்ளிடை மலை.

நேர்த்திக்கடன்களுக்கு என்று தனிச்சிறப்பு பொருந்திய வைரவப்பெருமானிடம் எக்காரியத்தை செய்ய விளையும் போதெல்லாம் நம்பிக்கையுடன் தரிசித்து சிந்தையில் இருத்தி முன்னெடுப்போமாயின் அக்கரும சித்திக்கு அளவில்லாது வெற்றி கிடைப்பது திண்ணமாக இருப்பதும் போற்றுதற்குரியது.

குல தெய்வம் என்றில்லாது வேண்டுவோர்க்கும் அருள்பாலிக்கும் வைரவப்பெருமான் 24.03.2023 இல் மகா கும்பாபிஷேக பெருவிழா காண்பது மேலும் அருட்கடாட்சம் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**கலாநிதி.இராஜராஜ சிறி கு.நகுலேஸ்வரக் குருக்கள், நகுலேஸ்வர ஆதீனம், கீரிமலை.**



## மாவை ஆதீனப் பேரரசின் ஆசிச் செய்தி

ஈழமணி திருநாட்டின் வடபால் மூர்த்தி. தலம். தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்றதும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்ரீ கந்த சுவாமியார் கோயில் இயக்கர். நாகர் காலத்திற்கு முற்பட்ட வரலாற்றுகளுடன் எழுச்சி பெற்றுக் கொண்டுள்ளது.

மாவை கந்தன் ஆலயத்தைச் சுற்றி இரண்டு கிலோமீற்றர் சுற்றுக் கிராமங்களில் பல கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றுள் மாவை கந்தன் ஆலயத்திற்கு மேற்குத் திசையில் கருகம்பனை கவுணாவத்தை அந்திரானை எனும் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு வேண்டும் வரங்களை எல்லாம் வாரி வழங்கி கொண்டிருக்கின்ற நரசிங்க வைரவப் பெருமானுக்கு புனருத்தாரண வேலைகள் நிறைவுற்று மகா கும்பாபிஷேக விழா நடைபெறுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் எவ்வித தடையும் இன்றி நடைபெற்று வைரவப் பெருமானின் திருவருளால் சகல ஜீவராசிகளும் எல்லா நலமும் பெற்று வாழ பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**மகாராஜ சிறி து.ஷ.இரத்தினசபாபதி குருக்கள்,**
**மாவை ஆதீனப் பேரரசு.**



## வாழ்த்துச் செய்தி மடல்

வலி.வடக்கு பிரதேசத்தில் கருகம்பனை நரசிங்க வைரவர் ஆலயம் மிகவும் பிரசித்தமானது. இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். வைரவப் பெருமானின் திருவருளால் அடியார்கள் அனைவரும் சீரோடும் சிறப்போடும் வாழ எனது நல்லாசிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்நியர் வருகைக்கு முன்பு பல ஆயிரம் சைவ ஆலயங்கள் இலங்கை முழுவதும் சிறப்புற்று விளங்கின. என் செய்வோம். அந்நியர்கள் எமது பாரம்பரியமான ஆலயங்கள் பலவற்றை அழித்தார்கள். அவ்வேளையில் சைவமக்கள் சூழாயுதத்தை மரநிழலிலும் கிணற்றடியிலும் நாட்டி வழிபாடு செய்தனர். காவல் தெய்வமாகிய வைர வழிபாடு சுமார் 300 ஆண்டுகளுக்கு மேல் சைவ சமயத்தின் மேன்மையைக் காத்தது.

ஈழத்தில் கிராமிய வழிபாட்டு மரபு நரசிம்ம வைரவர் வழிபாடு தனித்துவமானது. தங்கள் தீராப் பிணிகளை போக்குவதற்காக இரவு வேளைகளில் படையல் செய்து இத்தகைய ஆலயங்களில் முன்னோர் கூட்டுவழிபாடு செய்தனர். அப்பாரம்பரியம் மேன்மையானது. அவ்வகையில் இவ்வாலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் சிறப்பு என்றும் பேணிப் பாதுகாக்க வேண்டும். திருப்பணி வேலைகளில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி கூறி வாழ்த்தி கும்பாபிஷேகம் சிறக்க பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்,ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.**
**தலைவர்,சிவபூமி அறக்கட்டளை.**



## ஆசிச்செய்தி

வைரவ வழிபாடு சிவவழிபாடு போல் தொன்மையானது. சைவ மக்களிடம் மிகவும் அதிகளவில் கைக்கொள்ளப்பட்டது. மூல மலமாகிய ஆணவ மலத்தை ஒழித்து மோட்சம் கொடுக்கக் கூடியது. இவ் வழிபாடு யாழ்ப்பாணத்தின் நகுலேஸ்வரத்தில் எல்லைக் கிராமங்களாகிய கருக்கம்பனை கொல்லங்கலட்டி. மாவிட்டபுரம். மாதகல். என பரவி கோவில் கட்டி வழிபட்டு வந்தனர். போர்த்துக்கேயர். ஒல்லாந்தர் வருகையின் போது கோயில்கள் உடைக்கப்பட்ட போது. சைவத் தமிழர்கள் இவ் வழிபாட்டை சூல உருவாக ஆற்றடி. காட்டுப்பகுதி. மயானம் போன்ற இடங்களில் உருவமைப்புச் செய்து வழிபட்டதாகவும் காது வழிக் கதைகள் கூறும். சூலம் எம்பெருமானின் ஆயுதமாகினும் சூலம் என்றால் வைரவரைக் குறிக்கும். கருகம்பனை அந்திரானை கவுணாவத்தை அருள்மிகு நரசிங்க வைரவப் பெருமான் கோயிலும் தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு ஆகமசார் கோயிலாக மாற்றி 24.03.2023 மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இக்குடமுழுக்கு சிறக்க அடியார்களுக்கு இன்னருள் கிடைக்க ஆசி வழங்குகிறேன்.

**முதன்மை குருமணி அகில இலங்கை**
**வீரசைவ குரமஹா சன்னிதானம்**
**சிவஸ்ரீ கிரிட உருத்திரபுரேஸ்வர குருக்கள்**
**இரேணுகாச்சிரம்,கீரிமலை.**



## வாழ்த்துச் செய்தி

"நரசிங்க வைரவருக்கு ஆற்றும் பணியால் நம் பரம் பரைக்கும் அண்டாது பிணி". அந்த வகையில் தற்போது பக்தர்களின் பெருமுயற்சியாலும் நரசிங்க வைரவ நாதனின் அருளாலும் பேரனுக்கிரகத்தாலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு. புனருத்தாரணம் நிறைவடைந்து புதுப்பொலிவுடன் கற்றளியுடன் கூடிய அழகுடன் இவ்வாலயம் எழுந்துள்ளதை இட்டு பெருமிதம் கொள்கின்றேன்.

இலங்கையிலே மாபெரும் வேள்வி நடைபெறும் ஒரு முக்கிய சிறப்பு வாய்ந்த ஸ்தலமாக விளங்கும் நரசிங்க வைரவர் ஆலயத்தின் மகிமை அறியாதோர் யாராக இருக்க முடியும். யாழ்.குடாநாட்டில் வேள்வி என்றால் அது கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயமே தான். அவ்வாறு பிரசித்தி பெற்ற நரசிங்க வைரவப் பெருமானின் அருளாசி இக்கிராமத்து மக்களிற்கு கிடைப்பதோடு. பக்தர்கள் மத்தியில் பக்தி உணர்வும் ஆன்மிக எண்ணமும் சிந்தனைகளும் நிறையப் பெற்று. பரம்பரையாகப் பின்பற்றும் நடைமுறைகளை பின்பற்றி. பல்லாண்டு காலம் சைவசமயத்தின் புனிதத்தை பேண வேண்டும் என்பதுடன். இவ் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற அமைய எல்லாம் வல்ல அருள்மிகு நரசிங்க வைரவப் பெருமான் பாதம் பணிவோமாக.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**



வைரவப் பெருமான் மெய்யடியார்களே!

விராட்புருடனது இடைநாடியானதும் சைவத்தமிழ் மன் நாயன்மாராலும் திருமூலராலும் பாடல் பெற்றதும் பஞ்ச ஈ தினங்களால் விளங்கி இலங்கை எனப்பட்டதும் ஆகிய இ கிய யாழ்ப்பாணத்தின் கண் சேது சங்கமத் தீர்த்தத்தைக் உறையும் நகுலேஸ்வரத்தின் தென் மேற்பால் கருகம்பனை எழுந்தருளி தம்மடியார் பிறவிப்பிணி போக்கி அருளும் அ அஷ்டபந்தன பஞ்சகுண்டபஷ மஹா கும்பாபிஷேகம் நிக 24.03.2023 இன்று வெள்ளிக்கிழமை காலை 09.19 மணி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் குடமுழுக் யால். எம்பெருமான் மெய்யடியார்கள் அனைவரும் ஆசா கொண்டு வைரவப்பெருமானின் இன்னருளுக்கு பாத்திர



திருமூலரினால் 'சிவபூமி' என அழை சிறப்புற விளங்கும் யாழ்ப்பாண நன் யில் ஆல. அரசமர சோலையின் நடுவி ஆலயங்கள் அமைந்துள்ளன. குறிப்பா பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகிய கீரிமலை

இவ்வாலயம் பலநூறு ஆண்டுகள் தொன்மைய தலவிருட்சமாகிய மருத மரத்தின் முதுமை இதற்கு சிறந் பெருமான் கருகம்பனை வாழ் கிராம மக்களின் குல வேண்டுவார் வேண்டுவதை ஈயும் அற்புதப் பெருமா வழிபாடாற்றியதன் பின் எக்காரியத்தைத் தொடங்கினா இவ்வூர் மக்களின் அசையாத நம்பிக்கையாகும். வைரப் வேள்வி செய்து. பொங்கல் பூசைகள் செய்து நிறைவா அன்று தொட்டு இன்று வரை வெள்ளிக்கிழமை தோறு இதனால் இவ்வூர் மக்களின் காவல் தெய்வமாக வைர மிகச் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல வைரவப்பெரு

**கலாநிதி. திருமதி.சு**
**தலைவர், இந்**
**இந்துக் கற்கைகள் பீட**



## வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளரின் வாழ்த்துரை

வலிகாமம் வடக்கின் கருகம்பனை பதியில் கோயில் கொண்டுறையும் அருள்மிகு நரசிங்க வைரவிற்கு மஹா கும்பாபிஷேகம். வரலாற்றுப் புகழ் பூத்த ஆலயம். மரங்கள் சோலை கொள் அழகு நிறை ஆலயம். கருகம்பனை மக்களும் அயற்கிராம மக்களும் அன்றாடம் வழிபாடு செய்து அறநெறியில் தம் வாழ்வை கொண்டு செல்ல அருள்புரியும் நரசிங்க வைரவர் குடிகொண்ட ஆலயம். பழைமை மாறாது வேள்வி செய்து பொங்கி படையல் இட்டு மண்வாசனையும் கிராமிய வழிபாடும் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் இவ் ஆலயத்திற்கு புனராவர்த்தன பஞ்ச குண்டபக்ஷ பிரதிஸ்ட மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது. வைரவப்பெருமானை போற்றி வழிபட்டு எல்லா நலன்களும் உலகத்தவர்களுக்கு கிடைக்க எம் பெருமான் அருள்வேண்டி இறைஞ்சி பணிந்து அரிய திருப்பணி செய்யும் ஆலய தர்மகர்த்தா மற்றும் புனருத்தாரண சபையினரை வாழ்த்தி அமைகின்றேன்.

**சு.சுதர்ஜன்,**
**செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**



நரசி அண்டா லும் நி இறைவ செய்த அ பிறவிக்கு வைரவப் இருந்து நேர்தரு தேறலுற் ரின் ம எம் வசம வரலாற் இனிதே அவன்


**கும்பாபிஷேக விழா சிறப்புற வாழ்த்துவோர்**

**பிரகலாத் & அருண் பல்பொருள் வாணிபம்**
வை.சருஸ்னன்
நகுலேஸ்வரா வீதி. கீரிமலை.
077 395 7583

**சந்நிதியான் பிறிண்டேர்ஸ்**
ரவிந்தன்.
மல்லாகம்.
077 859 9047

**அம்பாள் கிறேசர் & நரசிங்க வைரவர் ரான்ஸ்போர்ட்**
கிருஸ்னதாஸ்
நகுலேஸ்வரா வீதி
077 495 4903

**அம்பிகை திருமண சேவை**
உ.லலிதாம்பிகை
வடலியடைப்பு. பண்டத்தரிப்பு.
077 447 5071

**Green Super Market**
மல்லாகம் சந்தி.077 779 0390

**Sairam Hard ware&Constrution**
கருகம்பனை சந்தி
077 727 9205

**ஐங்கரன் Cool Bar**
S.பிரதாப்
கே.கே.எஸ் சந்தி
077 935 2707

**N.K Work & சவீனன் சவுண்ஸ்**
நகுதீசன்
சித்திரமேழி. இளவாலை.
077 353 4626

**ABI Cakes**
R.மேகலா
கருகம்பனை
077 577 4800

**சிவன் அரைக்கும் ஆலை**
நகுலேஸ்வரா வீதி. இளவாளை.
076 301 9990

**அம்மன் சிற்பக்கலைக் கூடம்**
இ.ஈஸ்வரன்
கோவிலடி. புலியந்தோட்டம்.
சுன்னாகம்.
077 945 2034

**துர்க்கா அரைக்கும் ஆலை**
கருகம்பனை சந்தி
077 614 0907

**துசாகன் ரான்ஸ்போர்ட்**
வில்வராசா.
கல்லுப்புடுங்கி. கொல்லங்கலட்டி.
077 431 5350

**நாச்சிமார் கட்டிடப் பொருள் விற்பனை நிலையம்**
ஜெ.தர்சனன்
மெய்கண்டான் வீதி. இளவாலை.
077 621 7464

**ஓவியா பல்பொரு**
மயிலங்கூடல்.
077 606

**நீதன் நி**
மயிலங்கூடல்.
077 749

**கஜமுகன் ஹா**
E.S.P.நாக
147,149. ஸ்ரான்லி வீ
021 222


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னை அருள்மிகு நரசிங்க வைரவர் ஆலய
# ...ன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2023





...ழ் மன்னனாம் வீர இராவணனால் செங்கோலோச்சப்பட்டதும் ...பஞ்ச ஈஸ்வரங்களை தன்னகத்தே கொண்டதும் முத்து நவரத் ...கிய இந்நாட்டின் வடபால் சைவத்தமிழ் கலாசாரத்தின் தலையா ...தைக் கொண்ட நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான் ...கம்பனை கவுணாவத்தை அந்திரானையில் கோயில் கொண்டு ...ரும் அருள்மிகு நரசிங்க வைரவப் பெருமானின் புனராவர்த்தன ...கம் நிகழும் சுபகிருது வருடம் பங்குனி மாதம் 10 ஆம் நாள் ...9 மணி முதல் 10.41 மணிவரையுள்ள இடப லக்கினமும் அச்சுவினி ...முழுக்கு நடைபெற எம்பெருமான் நல்லருள் பாலித்துள்ளமை ...ம் ஆசார சீலர்களாக நடைபெறும் புனித நிகழ்வுகளில் கலந்து ...பாத்திரமாகும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## வாழ்த்துச் செய்தி

...ர அழைக்கப் பெற்ற இலங்கைத் திருநாட்டின் சைவமும் தமிழும் ...ன நன்நகரின் வடபால் புண்ணிய பூமியாகிய கருகம்பனை ...நடுவிலே எழுந்தருளியிருக்கும் வைரவர் ஆலயத்தைச் சுற்றி பல ...றிப்பாக. மிக அருகாமையில் தாய்த் தெய்வமாக நாச்சிமாரும் ...ரிமலை நகுலேஸ்வரப் பெருமானும் அருளாட்சி புரிகின்றார்கள். ...மையானது. இவ்வாலயத்தில் நாகதம்பிரான் அமர்ந்துள்ள ...து சிறந்த சான்றாதாரமாக அமைந்துள்ளது. நரசிங்க வைரவரப் ...ன் குலதெய்வமாக மட்டுமல்லாது அயல் கிராமத்தவர்களும் ...பெருமானாகவும் காணப்படுகின்றார். வைரவப்பெருமானை ...ங்கினாலும் தங்குதடையின்றி சிறப்பாக நடைபெறும் என்பது ...வைரப்பெருமானின் அடியார்கள் நேர்த்தி வைத்து. மடை பரப்பி. ...றைவான வாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள். இதுமட்டுமல்லாது ... தோறும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுவது சிறப்பம்சமாகும். ... வைரவப்பெருமான் விளங்குகின்றார். மஹா கும்பாபிஷேகம் ...வப்பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**...மதி.சுகந்தனி சிறீமுரளிதரன்,**
**..., இந்துநாகரிகத்துறை,**
**...கள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்.**



## மறப்பேனோ நரசிம்மனை...

எல்லாம் வல்ல கருகம்பனை கவுணாவத்தை அந்திரானை நரசிங்க வைரவர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேக நிகழ்விற்கு ஆசி கூறக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கு முதலில் நன்றி கூறி மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

நரசிங்க வைரவனுக்கு ஆற்றும் பணி நம் பரம்பரைக்கும் ...ண்டாது பிணி என்ற வேத மந்திரம் அனைவரது உள்ளங்களி...ம் நிலைத்துக் கொள்ள வேண்டுவதுடன் நம்பினோர் ...றைவனால் கைவிடப்படார் என்றது போல நரசிம்மனை நோக்கிச் ...ய்த அனைத்து தர்மங்களும் இப்பிறப்பில் மட்டுமன்றி மறு...விக்கும் துணையாக வந்து அருள் புரியும். இவற்றை எல்லாம் ...வரவப் பெருமானின் அருள் பெற்ற அடியார்களின் வாழ்வில் ...ருந்து தெரிந்து கொள்ளலாம். "தேடிக் கொண்டேன் என்னுள்ளே ...ர்தரு நந்தியை ஊடுபுக்காரும் உணர்ந்தறி வாரில்லை ஊடுபுக் ...றலுற்றேனவன் ஓலங்கள் மூடிக் கண்டேனே" என்ற திருமூல...ன் மந்திரம் இறைவனுடைய பார்வையினால் எல்லாம் ...ம்வசமாய் விடும் என்பதை உணர்த்திக் கொள்கின்றது. ...ரலாற்றுப் புகழ் பெற்ற இத் தலமானது புனர்நிர்மாணப் பணிகள் ...னிதே நிறைவடைந்து அனைத்து அடியவர்களின் வாழ்விலும் ...வன் அருள் கிட்ட வேண்டும் எனக் கூறி ஆசி நல்குகின்றேன்.

**சி.புஸ்பராஜா,**
**ஆலய தர்மகர்த்தா.**



## வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

மக்களிடையே ஒருங்கிணைந்த தெய்வ உணர்வைப் பதிய வைத்து மக்களை மானிடப் பண்புகளோடு மாண்புற வாழவைப்பதற்கு வழிகாட்டி நிற்பவை கோயில்களே ஆகும். இத்தகைய கோயில்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் முதலிய கிரியைகள் தெய்வ சாந்தியத்தை மென்மேலும் மெருகுறச் செய்வதுடன் மட்டுமன்றி. மக்களை நல்லுயர் விழுமியங்களைக் கடைக்கொள்வதற்கும் வழிவகுக்கின்றன.

பொதுவாக. ஆலயத்தின் வளர்ச்சி என்பது ஒரு தனிமனித வளர்ச்சியுடன் மட்டும் நின்றுவிடாது அவ்வாலயம் அமைவு பெற்றுள்ள ஊரின் வளர்ச்சியையே வெளிக்காட்டி நிற்கின்றது. அவ் ஆலயத்தைச் சார்ந்தவர்களின் உளப்பாங்கும் செயற்பாங்கும் நன்னெறிப் போக்கில் விருத்தி பெறுவதென்பது காலத்தின் கட்டாயமான தவிர்க்கவியலாத கருத்தியலாகும். இக்கருத்தியலைச் சமூகத்தில் மிளிர்வுறச் செய்வதில் ஆலயத்தில் நடைபெறுகின்ற கும்பாபிஷேகம் போன்ற கிரியைகள் பெருமளவு வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றன.

அவ்வகையிலேயே. புனருத்தாரணம் செய்யப்பெற்று. அழகிய கோவிலில் உறைந்து. காவற்தெய்வமாக ஊரை இரட்சித்துக் கொண்டிருக்கும் நரசிங்க வைரவப் பெருமானுக்கு நடைபெறுகின்ற மஹாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் நிகழ்வுற்று. அனைவரும் உயரிய நன்னெறிப் பாங்கில் நல்வாழ்வை வாழ்வதற்கு அருள்புரிய வேண்டும் என எல்லாம் வல்ல நரசிங்க வைரவப்பெருமானின் பாதம் பணிந்து. எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சண்முகராஜா சிவஸ்ரீ,**
**பிரதேச செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை.**



## வாழ்த்துச் செய்தி

கருகம்பனை கவுணாவத்தை அந்திரானை கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் நரசிங்க வைரவப் பெருமான் ஆலய சரித்திரத்தில் ஒரு பொன்னான நன்னாள். மூலமூர்த்தியாகிய வைரவப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறக் கிடைத்த நன்னாள். இவ்வூர் அன்பர்களின் பெரு முயற்சியினாலும் ஆலய நிர்வாகத்தினராலும் முன்னெடுக்கப்படுகின்ற இக் கும்பாபிஷேகப் பணிகள் சிறப்புற நடைபெற்று திருவருள் என்றும் பெருக எல்லாம் வல்ல வைரவப் பெருமானின் திருவடிகளை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

வைரவப் பெருமான் பக்தர்களை இரட்சிக்கும் காவற் தெய்வம் அகந்தையைக் கிள்ளி எறிந்து விட்டு அருள் கொடுப்பவர். இதனையே "பரமனை மதித்திடா பங்கையாசனன்" என கந்தபுராணம் அழகாக கூறுகின்றது. இவ் வைரவர் வழிபாடு என்பது சைவசமய வழிபாடுகளுள் ஒன்றாகும். சைவசமயத்தில் தோன்றிய 64 மூர்த்தங்களில் வைரவ மூர்த்தம் 38 ஆவது மூர்த்தமாக போற்றப்படுகின்றது.

எனவே இவ்வூர் அன்பர்கள் மற்றும் சைவ அன்பர்கள் அனைவரும் இவ் மஹா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கண்ணிலால் அவர் தம் நல்விழாப் பொலிவு கண்டு இன்ப சுகம் பெற வேண்டும் என்று வாழ்த்தி வணங்குகின்றேன்.

**த.தயானந்தன்,**
**அதிபர், யா/கீரிமலை நகுலேஸ்வரம் ம.வி.**



## வழித்துணையாவான் நரசிம்மன்...

"சூரியன் தோன்றுவதும் சுடரொளி பரவுதலும்
விடியலுக்கு அர்த்தமென்று எண்ணி விடல் கூடாது
இறையுணர்வு தோன்றுவதும் இதய சுத்தி பரவுவதும்
விடிவென்ற அர்த்தத்தின் அடிப்படை"

என்ற ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் அவர்களின் சிந்தனையை தன தாக்கி கருகம்பனைப் பதியிலே ஆண்டாண்டு காலம் ஆண்டருள் புரியும் அந்திரானை நரசிங்க வைரவ ஆலய புனர்நிர்மாண செயற்பாடுகள் சிறக்க நல்லாசி வழங்குவதையிட்டு புளகாங்கிதம் அடைகின்றேன்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற ஆழமான வைர வரிகளை மனதிலே நிலைநிறுத்திக் கொண்டு வைரவர் தெய்வம். காவல் தெய்வம் என்பதுடன் நம்பியவர் வாழ்வில் ஒளியேற்றுபவன் என்பதும் பொருள். சடங்கு நிலை கடந்தவனாய் ஆகம விதிக்குட்பட்டவனாய் விளங்கும் வைரவ வழிபாடு இன்று சைவ மக்கள் மத்தியில் ஓங்கி வளர்ந்து விட்டது. ஈழத்தில் பிரசித்தி பெற்ற வைரவர் ஆலயத்தில் அந்திரானை நரசிம்ம வைரவர் ஆலயமும் ஒன்று. இவ் ஆலயத்திற்கென்று தனிச் சிறப்பும் தனி இடமும் உண்டு. அடியவர்களின் நம்பிக்கையின் சின்னமாய் சிகரமாய் நித்திய ஒளி வீசுபவனாய் உள்ளார். எம் பெருமானை நம்பி ஆரம்பித்த இப்பணியானது வெகுவிரைவில் பூரணத்துவம் அடைந்துள்ளது. எல்லோர் வாழ்விலும் ஒளி பிறக்கவும் நன்மைகள் விளைய வேண்டும் என்று கூறி நல்லாசி வழங்குகின்றேன்.

**சி.கந்தசாமி உப தலைவர்,**
**ஆலய புனருத்தாபன சபை.**



## ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம். வலிகாமம் வடக்கில் கருகம்பனை ஊரில் கவுணாவத்தையில் அந்திரானைப்பதியில் மாட்சிமை பொருந்திய மருதமரத்தின் அருகில் ஆலமரக் கூடலில் அமர்ந்து எமக்கு அருள்புரியவென்றே வந்து அமர்ந்திருக்கின்ற வைரவப் பெருமானின் 2023 ஆம் ஆண்டு புனருத்தாரண கும்பாபிஷேகம் மார்ச் மாதம் 23.24.25 ஆம் திகதிகளில் பங்குனி மாத அஷ்வினி நட்சத்திரத்தில் நிகழ உள்ள இச் சந்தர்ப்பத்தில் புனருத்தாரண வேலைகள் திட்டமிட்டபடி நிறைவேறவும் கும்பாபிஷேகம் சிறப்புற நிகழவும் அவனருளாலே அவன் தாள் வணங்கி. தொடங்கும் காரியங்கள் எல்லாம் தொல்லையின்றி நிறைவேற விநாயகப் பெருமானை வேண்டுவதுடன் வைரவப் பெருமான். காளியம்பாள். நாகதம்பிரான் ஆகிய கடவுளரதும் அருளையும் ஆசியையும் வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எல்லாம் நல்லபடி சுமுகமாக கடன்.கவலை ஏதுமின்றி நிம்மதியாக நிறைவு பெற மீண்டும் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வளவு குறுகிய காலத்தில் (5மாத காலம்) இப்பாரிய திருப்பணியை முற்றுப்பெறச் செய்வதில் புனருத்தாரண சபைப் பொருளாளர் ஆகிய என்னுடன் சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றி கூறுவதுடன் அவர்களுக்காகவும் வைரவப் பெருமானின் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

குருதி ஒளிர் நீலமணி சூலம் கைக்கொண்ட வைரவப் பெருமான் அனைவருக்கும் அனைத்து நல்ல விடயங்களுக்கும் அருள் புரிவாராக.

**சி.ஜெயதாசன்,**
**பொருளாளர், ஆலய புனருத்தாபன சபை.**



## ஆலய நித்திய குருவின் ஆசியுரை

இவ் இலங்காபுரியில் புகழும் அருளும் பின்னிப் பிணைந்த கவுணாவத்தை அந்திரானை புண்ணிய தேசத்தில் அடியார்கள் வேண்டுவன ஈய்ந்தருளும் கிராமக் காவல் தெய்வமாம் நரசிங்க வைரவருக்கு அடியேன் செய்த நல்வினையின்பால் பதினொரு வருடங்களாக இடைவிடாத நித்திய பூசைகளை செய்து வருகின்றேன் என்பதை நினைத்தால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி வைரவப் பெருமான் அருளன்றி வேறு எதுவும் இல்லை. கடந்த மஹா கும்பாபிஷேகத்தில் அடியேன் பங்குபற்றியிருந்தேன். இம்முறை நடைபெறும் இக்கும்பாபிஷேகத்திலும் அடியேன் பங்கேற்றுள்ளேன் என்பதை நினைத்து அடியேன் பெருமிதம் கொள்கிறேன். இம்முறை நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வரும் மண்டலாபிஷேகம் என்பன சிறப்புடன் நடைபெற வைரவப் பெருமானின் திருவருள் துணை கொண்டு அடியேனுக்கு நல்லாசியும் கிடைக்க வேண்டும் என்றும் ஆலயத்தை நிர்வகித்துக் கொண்டு இருக்கும் ஆலய தர்மகர்த்தாவிற்கும் அடியார்களுக்கும் ஆலய திருப்பணிக்கு நிதி. பொருள். சரீர உதவி வழங்கிய அனைத்து அடியவர்களுக்கும் எம்பெருமானின் நல்லருள் கிடைக்க வேண்டும் என்று அடியேனின் ஆசியை கூறிக்கொண்டு இத்துடன் அடியேனின் ஆசியை நிறைவு செய்து கொள்கின்றேன்.

**ஆலய நித்திய அர்ச்சகர்-**
**சிவபதி த.செல்வக்குமரன் ஐயா,**
**கீரிமலை தீர்த்தக்கரை சித்தி விநாயகர் தேவஸ்தான**
**நித்திய அர்ச்சகரும் ஆதீன கர்த்தாவும்.**



## வாழ்த்துச் செய்தி

தொன்று தொட்டு குலதெய்வ வழிபாடுகள் கிராமம் தோறும் பேணப்பட்டு வந்துள்ளன. அவை பல்கிப் பெருகி பல்வேறு நிலைகளில் மேன்மை பெற்று மஹா கும்பாபிஷேகம் நிகழும் அளவிற்கு சிறப்புற்ற நிலைமையானது கவுணாவத்தை நரசிங்க வைரவப் பெருமானின் கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி வழங்கும் வரையிலதான செயற்பாட்டிற்கு தலை வணங்குகின்றோம்.

சிறுசிறு குடும்பங்கள் பொங்கல் பொங்கி. மடை பரப்பி. வேள்வியிட்டு. நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுகின்ற மரபு இன்றும் அருகி விடவில்லை என்பதற்கு இங்கேயே சான்றுகள் கிடைத்துவரும் அளவிற்கு மஹா கும்பாபிஷேக பெருவிழாவிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றோம்.மரபு வழித் தெய்வ வழிபாடு இன்றும் நீடித்து நிலைத்திருப்பது ஆன்மிக ரீதியாக ஆசுவாசப்படுத்துவது மேற்படி நிகழ்வு நிலைகளிலிருந்து கண்கூடாக நாம் அனுபவித்து பேருவகை அடைவதனைக் காணமுடிகிறது.

ஊரவர்களின் அயராத முயற்சியால் "சிறு துளி பெரு வெள்ளம்" திருப்பணி வேலைகள் நிறைவெய்தி மஹா கும்பாபிஷேகம் காண்பது ஊரிற்கு தனிச்சிறப்பு என்று வாழ்த்தி நரசிங்க வைரவப் பெருமானின் பாதங்களில் சரணாகதி அடைகின்றோம்.

**த.திருநாவுக்கரசு,**
**தலைவர், கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம்**
**புனருத்தாபன சபை உறுப்பினரும்**
**கட்டட மேற்பார்வையாளரும்.**

- **அப்பையா கலையகத்தினரால் வைரவப் பெருமானுக்கான இறுவெட்டு வெளியீடு இடம்பெற உள்ளது. அனைவரும் சிறப்பு பிரதிகளை பெற்றுக்கொள்ளலாம்.**
- **மகாகும்பாபிஷேக நிகழ்வுகள் சிவன் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.**


**...ல்பொருள் வாணிபம்**
...கூடல். இளவாலை.
...7 606 6053

**...ன் ரில்லிங்**
...கூடல். இளவாலை.
...7 749 4840

**...ன் ஹாட்வெயார்**
...P.நாகரத்னம்
...ன்னி வீதி. யாழ்ப்பாணம்.
...21 222 2833

**நியூ மற்ஸ் அக்கடமி**
இளவாலை வைத்தியசாலை
அருகாமை.
077 368 1149

**எஸ்.வி.எஸ் நரசிங்க வைரவர் ரான்ஸ்போர்ட்**
சசிக்குமார்
செந்தாவத்தை கொல்லங்கலட்டி.
077 518 9859

**சாரங்கன் உணவகம்**
நகுலேஸ்வரா வீதி. கீரிமலை.
076 546 0149

**தீனா ஸ்ரோர்ஸ்**
நகுலேஸ்வரா வீதி. கீரிமலை
077 431 6400

**ஓம் மல்ரி சென்ரர்&டிசைன்ஸ்**
மகாஜனக்கல்லூரி முன்பு.
தெல்லிப்பளை.
076 708 4466

**விநாயகர் விவசாயக் களஞ்சியம்**
அம்பனைச் சந்தி. தெல்லிப்பளை.
077 945 5946

**சிற்றி ஹாட்வெயார் ...**
இல.55,57 ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 5003

**சத்தியா மல்ரி சென்ரர்**
S.சத்தியசீலன்
நகுலேஸ்வரா வீதி. கருகம்பனை.
077 716 9055

**ALDI Electronics**
V.அரவிந்தன்
68,ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
077 360 4500

**நியூ லக்ஸ்மி ரேடர்ஸ்**
இல.275. கண்டி வீதி. சாவகச்சேரி.
077 324 1755

**சபரீசன் மல்ரி சென்ரர்**
நகுலேஸ்வரா வீதி.
கருகம்பனை கீரிமலை.
076 567 9645


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 135





“இருந்தால்தானே தம்பி கொண்டு வருவேன்! அந்த அழுக்குத் துணிகளை வெட்டாற்று முதலைகளுக்குப் போட்டு விட்டோம்! முதலை வயிற்றில் போனது திரும்பி வருமா?”

“திருட்டுப் பயல்களா! என்னுடன் விளையாடுகிறீர்களா? இதோ உங்கள் எஜமானரிடம் சென்று சொல்கிறேன், பாருங்கள்!” என்று வந்தியத்தேவன் வாசற்படியைத் தாண்டத் தொடங்கினான். மூவரில் ஒருவன் அவனைத் தடுப்பதற்காக நெருங்கினான். வந்தியத்தேவன் அவனுடைய மூக்கை நோக்கிப் பலமாக ஒரு குத்து விட்டான். அவ்வளவுதான் அந்த ஆள் மல்லாந்து கீழே விழுந்தான். அவன் மூக்கிலிருந்து இரத்தம் சொட்டத் தொடங்கியது.

இன்னொருவன் வந்தியத்தேவனுடன் மல்யுத்தம் செய்ய வருகிறவனைப் போல் இரண்டு கைகளையும் முன்னால் நீட்டிக் கொண்டு வந்தான். நீட்டிய கைகளை வந்தியத்தேவன் பற்றிக் கொண்டு, தன் கால்களில் ஒன்றை எதிராளியின் கால்களின் மத்தியில் விட்டு ஒரு முறுக்கு முறுக்கினான் அவ்வளவுதான்! அந்த மனிதன் ‘அம்மாடி’ என்று அலறிக் கொண்டு கீழே உட்கார்ந்து விட்டான்.

இதற்குள் மூன்றாவது ஆளும் நெருங்கி வரவே, வந்தியத்தேவன் தன் கால்களை எடுத்துக் கொண்டு ஒரு காலால் எதிரியின் முழங்கால் முட்டைப் பார்த்து ஒரு உதை விட்டான். அவனும் அலறிக் கொண்டு கீழே விழுந்தான்.

மூன்று பேரும் சட்புட்டென்று எழுந்து மறுபடியும் வந்தியத்தேவனைத் தாக்குவதற்கு வளைத்துக் கொண்டு வந்தார்கள். வெகு ஜாக்கிரதையாகவே வந்தார்கள்.

இதற்குள் மாளிகை வாசலில் குதிரை வந்து நின்ற சத்தம் கேட்டது. வந்தியத்தேவன் தன் குரலின் சக்தியையெல்லாம் உபயோகித்துத் “திருடர்கள்! திருடர்கள்!” என்று சத்தமிட்டுக் கொண்டே அவர்கள் மீது பாய்ந்தான். மூன்று பேரும் அவனைப் பிடித்து நிறுத்தப் பார்த்தார்கள். மறுபடியும் “திருட்டுப் பயல்கள்! திருட்டுப் பயல்கள்!” என்று பெருங்குரலில் கூச்சலிட்டான் வந்தியத்தேவன்.

அச்சமயம் சின்னப் பழுவேட்டரையர், “இங்கே என்ன ரகளை?” என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார்.

**முப்பத்திரெண்டாம் அத்தியாயம்**

**பரிசோதனை**

சின்னப் பழுவேட்டரையரைக் கண்டதும் வந்தியத்தேவன் சண்டையை நிறுத்திவிட்டு அவரை நோக்கி நடந்தான். காவலர்கள் எழுந்து ஓடி வந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களை அவன் சிறிதும் இலட்சியம் செய்யாமல் நாலு அடி முன்னால் நடந்து வந்து, “தளபதி! நல்ல சமயத்தில் தாங்கள் வந்து சேர்ந்தீர்கள்.

இந்தப் பக்காத் திருடர்கள் என்னுடைய உடைமைகளைத் திருடிக் கொண்டதுமல்லாமல், என்னையும் கொல்லப் பார்த்தார்கள்! விருந்தாளியை இப்படித்தானா நடத்துவது? இதுவா தஞ்சாவூர் சம்பிரதாயம்? நான் தங்களுக்கு மட்டும் விருந்தாளியல்ல, சக்கரவர்த்திக்கும் விருந்தாளி சக்கரவர்த்தினி சொன்னதைத்தான் தாங்களும் கேட்டீர்களே! பட்டத்து இளவரசரிடமிருந்து ஓலை கொண்டு வந்த தூதன்.

அப்படிப்பட்ட என்னை இந்தப் பாடுபடுத்துகிறவர்கள் மற்றவர்களை என்ன செய்து விடமாட்டார்கள். இப்படிப்பட்ட திருடர்களைத் தங்கள் பணி ஆட்களாக வைத்துக் கொண்டிருப்பது பற்றி ஆச்சரியப்படுகிறேன். எங்கள் தொண்டைமண்டலத்தில் இப்படிப்பட்ட திருடர்களை உடனே கழுவில் ஏற்றிவிட்டு மறுகாரியம் பார்ப்போம்!” என்று சரமாரியாய்ப் பொழிந்தான்.


(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி..)

## பெரியதை எடு



செம்மறி ஆட்டிற்கு அதன் திட்டம் புரிந்தது. சாக்கிற்குள் கையை விட்டு ஓநாயின் தலையை எடுத்தது.

ஏ! முட்டாள் ஆடே! பெரிய ஓநாயின் தலையை எடுத்துக் காட்டு என்றேன். நீ சிறிய தலையை எடுத்துக் காட்டுகிறாயே, பெரியதை எடு, என்று கத்தியது வெள்ளாடு.

அந்தத் தலையைச் சாக்கிற்குள் போட்டது செம்மறி ஆடு. மீண்டும் அதே தலையை வெளியே எடுத்துக் காட்டியது. கோபம் கொண்டது போல நடித்தது வெள்ளாடு. இருக்கின்ற ஓநாய்த் தலைகளில் பெரியதை எடு. மீண்டும் நீ சிறிய தலைகளையே எடுத்துக் காட்டுகிறாய். இதைப் போட்டுவிட்டு பெரிய தலையாக எடு, என்று கத்தியது.

அந்தத் தலையைப் போட்டுவிட்டு அதே தலையை மீண்டும் வெளியே எடுத்தது செம்மறி ஆடு. இதைப் பார்த்த மூன்று ஓநாய்களும் நடுங்கின.

இவை சாதாரண ஆடுகள் அல்ல. நீ அவற்றைக் கேலி செய்திருக்கக் கூடாது. சாக்கிற்குள் இருந்து ஒவ்வொரு ஓநாய்த் தலையாக எடுக்கின்றன என்றது ஒரு ஓநாய். மூன்றும் சிறிது நேரம் அமைதியாக இருந்தன.

ஆடுகளைப் பார்த்து ஓநாய் ஒன்று, உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி, குழம்பு நன்றாகக் கொதிக்கிறது. இன்னும் சிறிது தண்ணீர் [illegible] நான் சென்று தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று புறப்பட்டது. சிறிது நேரம் சென்றது. இரண்டாவது ஓநாய், அந்த ஓநாயிற்கு நம் அவசரமே தெரியாது. போய் எவ்வளவு நேரம் ஆகிறது? நான் சென்று அதை அழைத்துக் கொண்டு தண்ணீருடன் வருகிறேன் என்று புறப்பட்டது.

பரபரப்புடன் இருந்த மூன்றாவது ஓநாய், இருவரும் எங்கே தொலைந்தார்கள்? நான் சென்று அவர்களை அழைத்து வருகிறேன் என்று புறப்பட்டது. தப்பித்தோம் என்ற மகிழ்ச்சியில் ஓட்டம் பிடித்தது.

செம்மறி ஆடே! நம் திட்டம் வெற்றி பெற்று விட்டது. ஓநாய்களிடம் இருந்து தப்பித்து விட்டோம். விரைவாகச் சாப்பிட்டுவிட்டு இங்கிருந்து புறப்படுவோம். உண்மை தெரிந்து மீண்டும் அவை இங்கே வரும் என்றது வெள்ளாடு.

இரண்டும் அங்கிருந்த உணவை வயிறு முட்ட உண்டன. மகிழ்ச்சியுடன் ஏப்பம் விட்டுக் கொண்டே புறப்பட்டன.

ஓடிய மூன்று ஓநாய்களும் வழியில் சந்தித்தன.

ஆடுகளுக்குப் பயந்தா நாம் ஓடி வருவது? என்று கேட்டது ஒரு ஓநாய்.

நம்மை அவை ஏமாற்றி இருக்கின்றன. நாமும் ஏமாந்து விட்டோம் என்றது இன்னொரு ஓநாய்.

மூன்றாவது ஓநாய், நாம் உடனே அங்கு செல்வோம். அவற்றைக் கொன்று தின்போம் என்றது.

மூன்று ஓநாய்களும் அங்கு வந்தன. உணவை உண்டு விட்டு இரண்டு ஆடுகளும் ஓடி விட்டதை அறிந்தன.

ஏமாந்து போன ஓநாய்கள் பற்களை நறநறவென்று கடித்தன. பாவம் அவற்றால் வேறு என்ன செய்ய முடியும்?

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மால் நேற்றை சரிசெய்ய முடியாது.
ஆனால் நாளையை உருவாக்க முடியும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# காசநோய் இனங்காணப்படாத பலர் பொதுவெளியில் நடமாடுகின்றனர்

## வவு.காசநோய் கட்டுப்பாட்டு மருத்துவ அதிகாரி

(நெளுக்குளம்).

**காசநோய் அறிகுறியுடைய பலர் அதற்கான பரிசோதனைகளை முன்னெடுக்காமல் பொதுவெளியில் உலாவித் திரிவதாக வவுனியா மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

உலக காச நோய் தினம் இன்று நினைவு கூரப்படவுள்ளது. சாதாரணமாக ஒரு நாட்டில் ஒரு இலட்சம் பேருக்கு 63 நபர்கள் காச நோயா ளர்களாக இருக்க வேண்டும். ஆனால் இலங்கையை பொறுத்த வரை அந்த எண்ணிக்கையானோர் இனம் காணப்படவில்லை.

இலங்கையில் வருடத்திற்கு 13 ஆயிரம் காச நோயாளர்கள் அடையாளம் காணப்பட வேண்டிய நிலையில் 8 ஆயிரம் பேரே இனம் காணப்படுகின்றனர். வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் 54 பேர் கண்டறியப்பட்டுள்ளனர்.

ஆனால் இதன் எண்ணிக்கை 100 ஆக இருந்திருக்க வேண்டும். எனவே ஏனைய நோயாளிகள் வெளியில் உலாவித் திரியலாம். பிரதானமாக இருமல் மூலமாகவே இந்த நோய் பரவலடைகின்றது. இதனால் விரைவாக அனைவருக்கும் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றது.

இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல், சளியுடன் இரத்தம் வெளியேறல், உணவில் நாட்டமின்மை, உடல் மெலிதல், மாலைநேர காய்ச்சல் போன்றன இந்த நோய்க்கான அறிகுறி யாக உள்ளது. இப்படி யான அறிகுறிகள் இருப்பவர்கள் தாமதிக்காமல் வவுனியா வைத்தியசாலையில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் அதற்கான பரிசோதனைகளை செய்து கொண்டால் நோயை விரைவில் அறிந்து கொள்ள முடியும்.

இதற்கான மருந்தினை ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக எடுத்துக் கொண்டால் இந்த நோயை முற்றாக குணப்படுத்தலாம். இல்லா விடில் இந்த கிருமியானது சுவாசப்பையினூடாக உடல்முழுவதும் பரவும் தன்மை கொண்டது. எனவே இருமல் அறிகுறி இல்லாதவர்கள் கூட காசநோயாளர்களாக இருக்கலாம்.

அத்துடன் அநேக மாக நோய் எதிர்ப்புசக்தி குறைவானவர்கள், நீரிழிவு நோயாளர்கள், சிறுவர்கள், இல்லங்களில் வசிக்கும் முதிய வர்கள் போன்றவர்களிற்கு இந்த நோய் இலகுவில் தொற்றிக் கொள்ளும் சாத்தியக் கூறுகள் உள்ளது.

எனவே நோயை கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களும் ஒத்து ழைக்க வேண்டும். குறித்த விடயம் தொடர்பாக இன்றைய தினம் வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி ஒன்றினை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார். (4-6-299)

# மீன்பாடும் தேன்நாட்டில் திருமந்திரத் தேனாறு

மீன்பாடும் தேன்னாடு என்று புகழ்ந்து போற்றப்படுகின்ற மட்டக்களப்பு மாநகரின் கொக்கட்டிச்சோலையில் திருமந்திர அரண்மனை இன்று திறந்து வைக்கப்படுகிறது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையிலான சிவபூமி அறக்கட்டளை அமைப்பால் இத்திருமந்திர அரண்மனை நிர்மாணிக்கப்பட்டு இன்று திறப்பு விழா காண்கிறது.

திருமூலநாயனாரால் தரப்பட்ட மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை கருங்கல்லில் உளி கொண்டு செதுக்கி, அதனைப் புதிதாக அமைக்கப்பட்ட திருமந்திர அரண்மனையில் பதிப்பிப்பதான வேலைத்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டு, இன்றைய சுபநாளில் திருமந்திர அரண்மனை திறந்து வைக்கப்படுகிறது.

இங்கு மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை கருங்கல்லில் செதுக்குவதென்பது சாதாரணவிடயமன்று.

அந்த முயற்சி என்பது யாராலும் நினைத்துப் பார்க்க முடியாதது.

நம் தமிழ் வேந்தர்கள் காலத்தில்கூட, மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை கருங்கல்லில் செதுக்கிப் பாதுகாக்கின்ற முயற்சி நடந்திருக்கவில்லை.

ஆனால் இப்பெரும் முயற்சியை சிவபூமி அறக்கட்டளையின் அமைப்பாளரும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் நிறைவேற்றியுள்ளார் எனில் அதற்குள் இருக்கக்கூடிய தெய்வத் திருவருள் பற்றி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது.

ஆம், கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு பெரும் வரலாற்றுச் சாதனையை கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

அதிலும் மீன்பாடும் தேன்னாடு என்று புகழப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருவீதியில் இத்திருமந்திர அரண்மனை அமையப் பெற்றிருப்பது கிடைத்தற்கரிய பேறாகும்.

உண்மை. இலங்கைத் திருநாட்டை சிவபூமி என்று திருவாய் மலர்ந்து அழைத்தவர் திருமூலர்.

தான் அருளிய 3000 திருமந்திரப் பாடல்களை ஆறு.திருமுருகன் கருங்கல்லினால் செதுக்கி அதற்கு அரண்மனை அமைப்பார் என்பதாலும் திருமூலர் சிவபூமி என்று இலங்கைத் திருநாட்டை அழைத்தார் என்று சிந்திப்பதும் பொருத்துடையது.

ஆம், யாழ்ப்பாண மாநகரின் நுழைவாயிலாய் அமைந்த நாவற்குழி மண்ணில் திருவாசக அரண்மனை அமைத்து அனைவரையும் வியக்க வைத்த சிவபூமி அறக்கட்டளை இப்போது எங்கள் தாயக தேசத்தின் கிழக்கு மாகாணத்தின் மீன்பாடும் தேன்னாட்டில் திருமந்திர அரண்மனையை அமைத்தமை காலம் உணர்ந்த அரும்பெரும் காரியமாகும்.

ஆக, இப்பிரபஞ்சம் உள்ளவரை நிலைத்து நிற்கும் திருமந்திர அரண்மனை அமைவதற்கு அரும்பணியாற்றிய அத்தனை பேரும் சிவப் பரம்பொருளின் திருவருளுக்குப் பாத்திரமானவர்கள். அவர்களின் இப்பெரும் பணியால் மீன்பாடும் தேன்னாட்டில் இனி திருமந்திரத் தேனாறு ஓடும். இது பரம்பொருள் மீது ஆணை.

# சுற்றுலா பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பாரிய அதிகரிப்பு காணப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 84 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக அதன் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த வருடத்தின் முதல் 3 மாதங்களில் 3 இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (ம-7,9)

# வவுனியாவில் 14 வயது சிறுமி துஸ்பிரயோகம்

வவுனியாவில் 14 வயது மாணவி ஒருவர் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்து வரும் குறித்த சிறுமி கற்றல் செயற்பாட்டுக்காக வெளியில் வந்து வீடு நோக்கி சென்ற போது இளைஞர் ஒருவர் குறித்த 14 வயது சிறுமியை வழிமறித்து அவரை கொண்டு சென்று பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளார்.

தனக்கு நடந்த விடயத்தை சிறுமி வீட்டாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த இளைஞரை தேடி வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 08:30 மணியிலிருந்து மாலை 17:00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** நாச்சிக்குடாவிலும் **வவுனியா பிரதேசத்தில்** அகத்திமோட்டை, கூராய், கோவில்குளம், சீதுவிநாயகங்குளம், விடத்தற் தீவு-மருத்துவமனை, விடத்தற்தீவு கிராமம் - கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** இறால் பண்ணை, பள்ளமடு, நெடுங்கடல் மொபிட்டல் கோபுரம் ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர் வழங்கல் சபை, மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட்சிட்டி, மன்னார், பேருந்து நிலையம், கொன்வென்ட் வீதி, Jimbrown Nagar- Mannar, மன்னார் நகரம், மன்னார் நகரம் இலங்க்க மின்சார சபையடி, மூர் வீதி, நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), இளையோர் சேவை மையத்தடி, ஒல்லிமோட்டை, பள்ளிமுனை, மன்னார் [illegible] தேவாலயம், [illegible] பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# ஆசிரிய மாணவர்களின் பெறுபேறுகள் 31 ஆம் திகதிக்கு முன் வெளியீடு

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்றுள்ள ஆசிரிய மாணவர்களின் பெறுபேறுக்ள் எதிர்வரும் 31 ஆம் திகதி வெளியிடப் படவுள்ளன.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயின்ற 7, 500 ஆசிரிய மாண வர்களின் பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்க ளத்தினால் தேசிய கல்வியியல் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அது மதிப்பாய்வுகளின் பின்னர் எதிர் வரும் 31 ஆம் திகதி வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கமைய, தேசிய மற்றும் மாகாண ரீதியில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாகாணங்களின் ஊடாக மாகாண ஆசிரியர் வெற்றிடமும் கல்வி அமைச்சின் ஊடாக தேசியப் பாடசாலையின் வெற்றிடமும் பூர்த்தி செய்யப்படும்.

பெரும்பாலும் ஏப்ரல் மாதம் நிறைவடைவதற்கு முன்னதாக தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு 200 மில்லியன் செலவில் ஒட்சிசன் ஆலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நோயாளர்களின் தேவைக்காக ஒட்சிசன் நிரப்பு நிலையம் இல்லாத நிலையில் வெளி மாவட்டங்களில் இருந்து ஒட்சிசன் பெற்றுக் கொண்டு வந்து நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நிலை கடந்த காலத்தில் தொடர்ந்து வந்துள்ளது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கொவிட் - 19 தொற்று காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அமைந்த கொவிட்-19 சிகிச்சை நிலையத்திற்கு தேவையான ஒட்சிசனை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

இந்த நிலையில் கொவிட்-19 பாதுகாப்பு அவசர மருத்துவ உதவித்திட்டத்தின் கீழ் யுனப்ஸ் நிறுவத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலிய தூதரகத்தின் 200 மில்லியன் ரூபாய் செலவில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடங்கப்பட்ட ஒட்சிசன் ஆலை அமைக்கும் பணிகள் நிறைவடைந்த நிலையில் தற்போது முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு தேவையான ஒட்சிசன்கள் அங்கேயே உற்பத்தி செய்யப்படுவதுடன் மேலதிகமாக வெளி மாவட்ட மருத்துவமனைகளுக்கும் ஒட்சிசனை வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய நாட்டின் இந்த திட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பால் ஸ்டீபன் உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்கள்.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கர் தலைமையில் நடைபெற்றுள்ளது. (4-6)

# வவுனியாவில் முச்சக்கரவண்டி கட்டணங்கள் குறைக்கப்படும்

## சங்கத் தலைவர் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

நாடளாவிய ரீதியில் முச்சக்கரவண்டி கட்டணங்கள் குறைக்கப்பட்டு மக்களுக்கு குறைந்த கட்டணங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் வவுனியாவில் பல முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் பல்வேறுபட்ட நிலையில் கட்டணங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றதாக பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

இது குறித்து வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத் தலைவர் இ.ரவீந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது. முச்சக்கரவண்டி சேவைக் கட்டணங்கள் குறைப்பது தொடர்பில் அனைத்து சாரதிகளுடனும் கலந்துரையாடுவதற்கான கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்து அது குறித்து மிக விரைவில் கலந்துரையாடி அறிவிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (4-6-299)

# கஞ்சா விற்க முயன்ற இரு பொலிஸார் கைது

(முறிகண்டி)

கஞ்சா விற்க முயன்ற இரண்டு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தர்மங்கேணி பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பியகம மதுவரி திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலிற்கு அமைவாக குறித்த இரு பொலிஸாரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரு பொலிஸாரை தொடர்பு கொண்ட தகவலாளர்களான நால்வர் கஞ்சா பொதியினை பெற்றுக்கொள்வதற்காக சென்றுள்ளனர். இதன்போது, குறித்த இரு பொலிஸாரும் மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 2250 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-100)

# திருவடி நிழல் மடாலயம் திருக்குடமுழுக்கு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி திருவடி நிழல் சித்தர் மடாலய திருக்குடமுழுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று திருவடி நிழல் வீதி உலா வரும் என அளவெட்டி சைவ வாலிபர் சங்கம் அறிவித்துள்ளது. (4)

# இலவச சீருடை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்



(அராலி)

சீன அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவச சீருடை துணி வழங்கும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு வடக்கு மாகாணத்தில் உள்ள வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இடம்பெற்றது.

மத்திய கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைய இச்செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இம்முறை சீன அரசாங்கம் 70 வீதமான சீருடை துணியை இலங்கை அரசிற்கு வழங்கியுள்ளது. உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து இருந்து 30 வீதமான சீருடைகள் துணியும் அரசினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (4-6-104)

# வவுனியா விவசாயிகளுக்கு 30 மெ.தொன் அடிக்கட்டு உரம் வழங்கி வைப்பு

(குருமன்காடு)



வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு அடிக்கட்டு உரம் வழங்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனடிப்படையில் முதல் கட்டமாக 30 மெற்றிக் தொன் உரம் வழங்கி வைக்கப்பட்டது. வவுனியா, கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு காலபோக நெற் செய்கைக்காக மானிய விலை அடிப்படையில் யூரியா உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளுக்கு இலவசமாக அடிக்கட்டு உரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான 5669 ஏக்கர் நெற்செய்கைக்காக 2423 விவசாயிகளுக்கு 84.4 மெற்றிக்தொன் அடிக்கட்டு உரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதில் முதல்கட்டமாக 30 மெற்றிக் தொன் வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் அதனை குறித்த கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழான கல்வீரங்குளம் கமக்கார அமைப்பு விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (4-6-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 330 |
| தக்காளி | 120 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 150 | 200 |
| பூசணி | 80 | 80 | 60 |
| புடோல் | 160 | 140 | 160 |
| வாழைக்காய் | 180 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 150 |
| பாகற்காய் | 450 | 450 | 450 |
| வெண்டக்காய் | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 150 | 120 | 150 |
| லீக்ஸ் | 250 | 250 | 280 |
| பீற்றூட் | 140 | 180 | 160 |
| கறிமிளகாய் | 350 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 1300 | 1200 | 1200 |
| போஞ்சி | 250 | 280 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | — | 120 | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 120 | 120 |

# பாவனைக்கு உதவாத உணவுகளை வைத்திருந்த வர்த்தகருக்கு அபராதம்

(மன்னார்)

மன்னார் நகரில் பிரபல உணவு விற்பனை நிலையத்தில் சுகாதாரமற்ற, மனித பாவனைக்கு பொருத்தமற்ற, எலி மொய்த்த உணவுகள் களஞ்சியப்படுத்தியும் விற்பனைக்காக வைத்திருந்த நிலையில் குறித்த உணவகத்துக்கு எதிராக நேற்று மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உணவகத்துக்கு எதிராக 5 குற்றச்சாட்டுகள் முறையிடப்பட்டதற்கு அமைவாக குறித்த உணவக உரிமையாளருக்கு 70,000 ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் அதனை செலுத்த தவறும் பட்சத்தில் ஒவ்வொரு குற்றத்துக்காகவும் 3 மாதம் சிறைத் தண்டனையும் மார்ச் மாதம் 29 வரை வியாபாரத்தை தடை செய்து நீதிவான் நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மேலும் கைப்பற்றப்பட்ட உணவுப் பொரு[illegible] அழிக்க நீதிமன்ற[illegible] விட்டது. (4-6)

# வணிக கண்காட்சியும் ஆண்டு பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் வணிகக் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு 23, ஆச்சிரமம் வீதி, வதிரி, கரவெட்டி எனும் முகவரியில் அமைந்துள்ள BOD மண்டபத்தில் இடம் பெறும்.

அத்துடன் மறுநாள் 15 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் காலை 8 மணிக்கு அதே BOD மண்டபத்தில் இடம்பெறும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகுல் காந்திக்கு...

வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி குறித்து அவதூறாக பேசிய வழக்கில் காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ஏதுவாக ராகுலுக்கு உடனடியாக பிணை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## பால்மாவின்...

ரூபாயினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய விலை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் எனவும் பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விலைக் குறைப்பின் மூலம் 400 கிராம் பால்மா பாக்கெற் ஒன்றின் விலை 80 ரூபாயினால் குறைக்கப்படும். (ம-7,9)

## யூரியாவின்...

50 கிலோ யூரியா உர மூட்டையின் விலையை 18,500 ரூபாயில் இருந்து 11,000 ரூபாயாக தனியார் துறை உர இறக்குமதி நிறுவனங்கள் குறைத்துள்ளன.

இது உடனடியாக அமுலுக்கு வரும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (ம-7,9)

## தேர்தல்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பை மார்ச் 28, 29, 30, 31ஆம் திகதிகளிலும் ஏப்ரல் 3ஆம் திகதியும் நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து கலந்துரையாடியுள்ளபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏப்ரல் 25ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ள வாக்களிப்பு தினம் தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7,9)

## அத்தியாவசிய...

ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

கொழும்பு சங்கமித்த மகளிர் கல்லூரியில் நேற்று பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல் மூலம் விரைவில் தீர்வு காண முடியும் என தாம் நம்புவதாகவும் இல்லையேல் பாடசாலைகளை அத்தியாவசிய சேவையாக மாற்றுவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நேரிடும் என ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## தமிழ் மக்களின்...

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி தொடர்பில், நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஊடகப் பிரதானிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி கிடைத்துள்ள நிலையில் இலங்கை ஏற்கெனவே பெற்றுள்ள கடன்களை மறுசீரமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, மறுசீரமைப்பின் பின்னரே கடன் செலுத்தல் காலம் தொடர்பில் கூறமுடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதிய உதவி விடயத்தில் எடுத்த பிரசித்தமற்ற தீர்மானத்தைப் போன்று தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் பிரசித்தமற்ற தீர்மானம் எடுக்கப்படுமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், குறித்த விடயம் பாராளுமன்றின் இணக்கத்துடன் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் இணக்கம் வெளியிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேநேரம், இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பது என்ற கூற்று தொடர்பில் கருத்துரைத்த அவர், அது தொடர்பில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். (ம-7,9)

## 101 வகையான...

டும் என்பதற்கு அமைய இந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தடை செய்யப்பட்ட 101 வகையான பொருட்களை மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனம் உட்பட உலோகங்கள், கேக், பிளாஸ்டிக், சீஸ், இறப்பர், மரச்சாமான்கள், சோப்புகள், காய்கறிகள் உள்ளிட்ட பொருட்கள் மீண்டும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## மின்சாரம்...

இதில் வவுனிக்குளம் பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் சுதாஜினி (வய்து-38) வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து வயர் மூலம் மின்சாரத்தினை வெளியில் எடுத்து முற்றத்தில் வெளிச்சம் போடுவதற்காக எடுக்க முற்பட்டிருந்த நிலையில், மின்சார வயரினை பிடித்த வேளையிலேயே குறித்த பெண் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்

குறித்த பெண் திரும்மணமாகி 5 மாதங்கள் ஆன நிலையில் இந்த துன்பியல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதவான் சடலத்தை பார்வையிட்டதுடன் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ம-7,9,315)

## யாழ்...

நிலையத்தை வந்தடைந்தது.

சுற்றுலா நுழைவு விசா மூலம் வந்தடைந்த குறித்த குழு தொடர்பில் சிவசேனை அமைப்பினரால் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த மதமாற்றும் குழுவினரது கடவுச்சீட்டுக்களை கைப்பற்றிய குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் அனைவரையும் நான்கு மணி நேரம் தனியறையில் வைத்து விசாரணை நடத்தியதோடு, இன்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பு பத்திரமுல்லையில் உள்ள குடிவரவு திணைக்கள அலுவலகத்துக்கு நேரில் வருமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் மதமாற்ற பிரசாரத்துக்கு எதிராக இன்று மானிப்பாயில் இடம்பெறவிருந்த அறவழிப் போராட்டம் இடம்பெறாது என மறவன்புலவு சச்சிதானந்தம் அறிவித்துள்ளார். (ம)

# ஐ.எம்.எப் கடன் கிடைத்தது

## நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தினால் இந்நாட்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் வசதியின் முதல் தவணை நிதி அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 333 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஊடகப் பிரதானிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் நிதியமைச்சின் செயலாளர் இதனை தெரிவித்துள்ளார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1523
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 4 6 0 1 4 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1098
K 04 45 54 65
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.23 சீட்டிழுப்பு இலக்கம் 3310
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
I 02 17 49 69
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 23/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1416
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
U 20 04 29 40 72

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.23
சீட்டிழுப்பு இலக்கம் 377
கும்பம் 11 15 16 17 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/23
சீட்டிழுப்பு இலக்கம் 5068
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 8 6 9 2 5 4
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1869
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.03.23
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,732,740/-
வெற்றி இலக்கங்கள் 10 54 64 68 P
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 581 திகதி 2023-03-23 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 40 43 47 விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 18,317,648/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,423,406/-
திகதி 2023-03-23 வெற்றி வாரம் 3755 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 02 12 19 34
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,763,040/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 08 28 31 50 52
சீட்டிழுப்பு வாரம் 1219 வர்ணம் செம்மஞ்சள் 2023.03.23 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 315,844,844.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.03.23
சீட்டிழுப்பு இல: 4204
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,414,600/-
வெற்றி இலக்கங்கள் 16 18 35 48 F

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2043 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.03.23 தினம் வியாழக்கிழமை
M 16 23 68 69
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,845,180/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வீகப் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் நூறாவது ஆண்டு பிறந்ததின நினைவுத் தொகுப்பு



24.03.2023



மக்களால் பெரிதும் விரும்பப்படும் திரைப்படப் பாடல்களின், ஏறக்குறைய 85 ஆண்டுகால வரலாற்றில் வேறு எந்தப் பாடகரும் பெறாத இடத்தை ரி.எம்.எஸ் என்று அன்பாக அழைக்கப் பெறும் ரி.எம் சௌந்தரராஜன் பெற்றிருக்கிறார்.

இது அவருக்கு கிடைத்த தெய்வீக அருளாகும். இன்று (24.03.2023) அவருக்கு நூறாவது பிறந்ததினமாகும்.

வருடங்கள் பல கடந்தாலும் இன்றைக்கும் அவரது திரைப்பாடல்களின் ரீங்காரமும் பக்திப் பாடல்களின் பக்தி மணமும் குறையாமல் இருக்கின்றன.

வானொலியும் தொலைக்காட்சி சனல்களும், ஒலி நாடாக்களும், இறுவட்டுக்களும் (C.D) ஆலய விழாக்களிலும் ரி.எம்.எஸ் பாடிய நூற்றுக்கணக்கான பாடல்களை மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன.

ரி.எம்.எஸ். இன் கம்பீரமான குரலில் திரைக்கதையில் பாடல் இடம்பெறும் சந்தர்ப்பங்களை நன்கு புரிந்து, பொருளை உணர்ந்து பாத்திரமாகவே தன்னை உணர்ந்து உணர்ச்சி ததும்ப அவர் பாடும் விதம், தமிழ் மொழியின் மாற்றுக் குறையாத உச்சரிப்பை வல்லினம்,மெல்லினம், இடையினம் எனத் தமிழில் வரும் பேதங்களைச் சிறப்பாக காட்டி பாடிய விதம், அத்துடன் லகர,ளகர,ழகர வேறுபாடுகளைக் காட்டிய திறன் ஈடு இணையற்ற உணர்ச்சி பிரவாகங்களை ரசிகர்களிற்கு கொடுத்து, அத்துடன் **பாடகர்களில் நவரசங்களிலும்பாடிய பெருமை இவருக்குத்தான் உண்டு.** பளிச்சென்று ஒலிக்கும் அவரது குரலில் திரைச் சரித்திரத்தின் ஜீவனான கட்டங்களை உயிர்ப்பிக்கும் கணக்கற்ற பாடல்கள் குடிகொண்டிருக்கின்றன.

**எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய குரல் வளமும் தனித்திறமையும்** ஒரு விழாவில் கவியரசர் வைரமுத்து பேசியதுபோல் அப்பழுக்கற்ற பெண் தன்மை கலவாத ஆண் குரல் ரி.எம்.எஸ்ஸிற்கு கிடைத்தது ஆண்டவன் அருள். **பாடகர் வரலாற்றிலேயே நடிகர்களிற்கு ஏற்ற மாதிரி குரல் பாவனையை மாற்றிப் பாடும் திறன் இவர் ஒருவருக்குத்தான் கைவந்தது என்பது மறுக்க முடியாத சாதனைத் திறனாகும்** குறிப்பாக எம்.ஜி. ராமச்சந்திரன் சிவாஜி கணேசன் மற்றும் எஸ்.எஸ். ராஜேந்திரன், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் போன்றோருக்கு அவரவர் **உடல் மொழிகளையும் கவனத்திற்கொண்டு** பாடிய அசாத்திய திறமைப் பாடல்களை ஆழ்ந்து ரசிக்கக்கூடிய அனைத்து தரப்பினரையும் மகிழ வைத்தது. காட்சிகள் படமாக்கப்படுவதற்கு முன்பே பாடல் பதிவு நடைபெறுகிறது.எனவே இவரது பாடல்களில் நடிக்கும் நடிகர்களிற்கு நடிப்பு மிகச்சிறப்பாக அமைந்து விடுகிறது. குறிப்பாக இரு துருவங்களாக விளங்கிய சிவாஜி கணேசன், எம்.ஜி. ராமச்சந்திரன் இருவருக்கும் அவர்களே பாடுகிறார்களோ என்று நினைக்குமளவிற்கு அவர்களின் பாவனைகளை மிகச் சரியாகப் புரிந்து கொண்டு ரி.எம்.எஸ் மிகப் பொருத்தமாகப் பாடினார். இதை மக்கள் வியந்து போற்றுகிறார்கள்.

சந்தர்ப்பங்களிற் கேற்ப சிவாஜி கணேசனுக்கு கொடுத்த **நெகிழ்ச்சிக்குரல்**, எம்.ஜி.ராமச்சந்திரனுக்குக் கொடுத்த **புரட்சிக்குரல்**, ஜெய்சங்கர், ரவிச்சந்திரனுக்கு கொடுத்த **மகிழ்ச்சிக் குரல்** என மனம் மறக்காத எண்ணற்ற பாடல்களைப் பாடியுள்ளார். இதன் தொடர்ச்சியாக எத்தனையோ நடிகர்களிற்கு பாடியாயிற்று.

பொருள் பொதிந்த மக்கள் தங்கள் வாழ்க்கையோடு தொடர்பு படுத்திப் பார்க்கும் பாடல்களாகவும் அவை அமைந்துள்ளன. மக்களின் பண்பாடு என்று சொல்லப்படுவதை அவர்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பண்டிகைகள், சடங்குகள்,உணவு முறைகள், கலைகள் என்று கொண்டால் கோடிக் கணக்கான தமிழர்கள் விரும்பிக் கேட்கும் திரைப் பாடல்களும், பக்திப் பாடல்களும் அவர்களின் பண்பாட்டுக் கூறு என்றுதான் கொள்ள வேண்டும்.

இப்படிப்பார்க்கும்போது கர்நாடக இசை, நாட்டுப் பாடல், மெல்லிசை,மேற்கத்தேய இசை.... என்று பல் இசை வழிகளில் பாடிய ரி.எம். சௌந்தரராஜனின் பெயர் தமிழர்களின் பண்பாட்டின் பிரதிபலிப்பாக விளங்குகிறது தமிழ்ச்சொற்களை சுத்தமாக உச்சரித்து தமிழ் மொழியின் சிறப்பை உணர்த்தினார் தமிழ்ப் பண்பாட்டையும் காத்தர் இப்படி உருவான ரி.எம் எஸ்ஸின் பாடல்கள் அவை இடம்பெற்ற திரைப் படங்களைத் தாண்டி பாடல் இலக்கியமாக மக்களுக்கு இன்று பயன்படுகின்றன.

(14965)

உ

வாயசைக்கும் நடிகர்களே
சொந்தக் குரலில் பாடுவது போன்று
எண்ண வைக்கும் உன் குரல் நயம்
உன் காதற் பாடல்களில் இனிமை இருக்கும்
இளமை இருக்கும்
உன் தத்துவப் பாடல்களில்
முதிர்ச்சி இருக்கும்
உன் பக்திப் பாடல்களில் பரவசம் இருக்கும்
உன் குரலினிமை என்றும் நிலைத்திருக்கும்

-பவளநாதன், மயிலிட்டி

### வாழ்க்கைச் சரித்திரம்

மதுரை நகரில் மீனாட்சி ஐயங்கார் - வேங்கடம்மாள் தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக 1923 ம் ஆண்டு மார்ச் 24ம் திகதி பிறந்தார் இளமையில் வறுமைய்யை அனுபவித்தார் அக் காலத்தில் பிரபலமான பாடகர்களின் பாடல்களை ரசிக்கும்(கிரகிக்கும்) ஞானத்தை பெற்றிருந்தார்.

குறிப்பாக தியாகராய பாகவதரின் பாடல்களில் மிகவும் ஈர்ப்புப்பெற்று விரும்பிக்கேட்டு கிரகித்தார் **நண்பர் ஒருவரின் வீட்டுக்கு வந்த தியாகராஜ பாகவதரின் முன்னால் அவரது பாட்டையே பாடி பாகவதரால் மிகவும் பாராட்டப்பட்டார்.**

பின்பு முறைப்படியாக இரு பாகவதர்களிடம் அடிப்படை சங்கீத விசயங்களைக் கற்றுக் கொண்டார்.

### முதல் சந்தர்ப்பம்

எத்தனையோ பிரம்ம பிரயத்தனங்களுக்குப் பிறகு 1948 ஆம் ஆண்டு வெளியான "கிருஸ்ண விஜயம்" என்ற படத்திற்காக தயாரிப்பாளர் - இயக்குனர் சுந்தரராவ் நட்கர்னியின் சிபார்சின் பேரில் எஸ்.எம்.சுப்பையா நாயுடுவின் இசையில் தனது முதலாவது திரைப் பாடலான "ராதே என்னை விட்டுப் போகாதடி" என்ற பாடலை பாடினார்.

பாட்டு நட்சத்திரமான தியாகராஜா பாகவதரைப் பின்பற்றி முதல் அடி எடுத்துவைத்தார் பின்னர் இசையமைப்பாளர் ஜீ. ராமனாதனால் சிறந்த பின்னணிப் பாடகராக உருவாக்கப்பட்டார். தொடர்ந்து இசை அமைப்பாளர் கே.வி. மகாதேவன் அவர்களாலும் மெருகூட்டப்பட்டார். அந்தக் கால கட்டத்தில் பாரம்பரிய மணம் குன்றாத பல பாடல்களைப் பாடினார். திரையில் அழகான மெல்லிசைப் பாடல்கள் தலை தூக்கியபோது அந்தப் படலத்தில் சௌந்தரராஜன் ஐயா முக்கிய பங்கு வகித்தார்.

"தூக்குத் தூக்கி" பாடத்துக்காக சிவாஜிக்கு முதல் முதலில் குரல் கொடுத்து ஆறு பாடல்களைப் பாடினார். அந்தப் பாடல்கள் பெரு வெற்றியடைந்து ரி.எம்.எஸ் அவர்களை ஒரு தூக்குத் தூக்கிவிட்ட்து, அதன் பின்னர் எம்.ஜி. ஆருக்கு முதல் முதலில் குரல் கொடுத்து "மலைக்கள்ளன்" படத்துக்காக "எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்" என்ற பாடலைப் பாடினார். இவைகளைத் தொடர்ந்து ரி.எம்.எஸ்ஸின் வளர்ச்சி அபரிமிதமானது.

கால மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து தன்னுடைய கலை ஆற்றலைத் தன் தங்கக் குரலால் காண்பித்ததால் திரை உலகில் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் முன்னணிப் பாடகராக நிலைக்க முடிந்தது நான்கு தலைமுறை நடிகர்களுக்கு பாட முடிந்தது.

### பக்திப் பாடல்கள்

பக்திப் பாடல்கள் பாடுவதிலும் முன்னணியில் உள்ள கலைஞர்களில் ஒருவராக பக்திப் பாடல்களுக்கு என்று தனியான ஒரு குரல் வளத்தில் ரசிகர்களை மெய்மறக்க வைத்தார். அவர் இசையமைத்துப் பாடிய நூற்றுக்கணக்கான பக்திப் பாடல்கள் காலம் பல கடந்தும் புதுப்பொலிவோடு மக்கள் மனதில் ஒலிக்கின்றன. "கற்பக வல்லியின் பொற்பாதங்கள்" "உள்ளம் உருகுதையா" "கந்தன் திருநீறணிந்தால்" "அழகென்ற சொல்லுக்கு முருகா" போன்ற பாடல்கள் அறுபது ஆண்டுகளுக்குப் பின்னரும் புதுமை குன்றாமல் இருக்கின்றன. திரையிசையில் கொடி கட்டிப் பறந்தவர். தானே இசையமைத்துப் பாடிய பக்திப் பாடல்களிலும் சிறந்து விளங்குவது கூடுதல் பெருமையல்லவா.இந்த வகையில் ரி.எம்.எஸ் தானே பாடி நடித்த படங்களான பட்டிணத்தார், அருண கிரிநாதர் இரண்டிலும் இடம்பெற்ற பாடல்கள் உணர்ந்து கேட்போரின் உடலைப் புல்லரிக்கச் செய்து, உயிரை உருக்கிவிடும் அளவிற்கு தெவிட்டாத தெள்ளமுதாக அமைந்தன.

### உறுதுணையாக நின்றவர்கள்

ரி.எம்.எஸ் அவர்களின் முயற்சிக்கும் சிறப்புக்கும் பக்கபலமாக நின்ற இசையமைப்பாளர்கள், பாடல் ஆசிரியர்கள் சக பாடகர்கள், நடிகர்கள் ஆகியோரை நினைவில் கொள்வது சாலவும் சிறந்ததாகும்.

### இசையமைப்பாளர்கள்

ரி.எம்.எஸ் வளர்ச்சிப் பாதையில் முக்கிய பங்காற்றிய இசையமைப்பாளர்களாக ஜி.ராமனாதன், எஸ்.எம்.சுப்பையா நாயுடு, கே.வி.மகாதேவன், எம்.எஸ். விஸ்வநாதன், ஜி.கே.ராமமூர்த்தி, வேதா, டி.ஆர்.பாப்பா, வி.குமார், சங்கர்- கணேஷ் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

### பாடல் ஆசிரியர்கள்

மருதகாசி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன், புலமைப்பித்தன், பாரதிதாசன், வாலி ஆகியோர் முக்கியமானவர்கள்.

### சக பாடகர்கள்

சக பாடகர்கள் என்று பார்க்கும்போது P.சுசீலா அவர்களின் பங்கு அளப்பரியது. ரி.எம்.எஸ், சுசீலா இருவரும் ஒருவருக்காக மற்றவரும் பிறந்தார் என்பதாக சமமான உணர்ச்சிகளை வழங்குபவர்களாக மிக மிகச் சிறந்த பாடக ஜோடிகளாக பாடல்களை வழங்கினார்கள். அடுத்தபடியாக எஸ்.ஜானகி, L.R.ஈஸ்வரி, ஜிக்கி, P.லீலா, ஜமுனா ராணி, சீர்காழி கோவிந்தராஜன், P.B.ஶ்ரீநிவாஸ், A.L.ராகவன், சந்திரபாபு ஆகியோர் ரி.எம்.எஸ் உடன் இணைந்து நல்ல பல பாடல்களைக் கொடுத்தனர்.

### நடிகர்கள்

சிவாஜி, எம்.ஜி,ஆர், ஜெமினி, எஸ்.எஸ்.ஆர். ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், முத்துராமன், அசோகன், சிவகுமார் ஆகியோருக்கு ரி.எம்.எஸ்ஸின் மிக நல்ல பாடல்கள் அமைந்தன.

ரி.எம்.எஸ் அவர்கள் எந்த நடிகர்களையும் மற்றக் கலைஞர்களையும் மரியாதை செய்தே பழக்கப்பட்டவர். ஆனால் சில பத்திரிகையாளர்கள் ரி.எம்.எஸ் சொல்வதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தப்பாக எழுதினார்கள். இதுதான் உண்மை.

இசையில் நீடித்த நிலைத்த தன்னிரகற்ற புகழ் பெற்று விளங்கும் தெய்வீகப் பாடகர் ரி.எம். சௌந்தரராஜன் வாழ்வாங்கு வாழ்ந்து கீதவாரிதி, இசைக்கடல், கற்பகதரு மன்னர் எழிலிசை மன்னர், தங்கக்குரலோன், கலைமாமணி, பத்மஶ்ரீ, கீதரஞ்ஞன வாரிதி, அருப்பா இசைமணி போன்ற பட்டங்களைப் பெற்று பாராட்டுப் பெற்றார். 1972ஆம் ஆண்டில் ஏ.வி.எம் மெய்யப்பச்செட்டியார் ரி.எம்.எஸ் பாடத் தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவானதை ஒட்டி விழாவாகக் கொண்டாடினார். ஆனாலும் நூறு வீதம் முயற்சி எடுத்துப் பாடியதன் உணர்ச்சிகரமான பாட்டுக்களால் பெரும் பயன் அடைந்த இரு பெரிய நடிகர்களும் தனக்குரிய கௌரவத்தைத் தரவில்லையே என்ற குறை ரி.எம்.எஸ்ஸிற்கு இறுதி வரை இருந்தது. அத்துடன் யார் யாருக்கோ எல்லாம் தேசிய விருது வழங்கும் இந்திய அரசு ரி.எம்.எஸ்ஸிற்கு வழங்காதது மிகப்பெரிய தவறாகும். இந்த நியாயமான குறைகளை ரி.எம்.எஸ்ஸை ஆழ்ந்து ரசிப்போரும் ஏற்றுக் கொள்வார்கள். தீவிர முருக பக்தரான அவரது வாழ்க்கை எந்தத் திரைப்பாடகருக்கும் கிடைக்காத ஒன்று. அவரது ஆன்மா முருகன் காலடியில் சங்கமமாக மீண்டும் ரசிகர்களாகிய நாம் வேண்டிக் கொள்வோம்.

ஒரு சூரியன். ஒரு சந்திரன். ஒரு பூமி. ஒரு ரி.எம்.எஸ்

**- யாழ் மாவட்ட ரி.எம்.எஸ் ரசிகர்கள்**
**- கனடா வாழ் சிவபாலன், வரதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.